உ
கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சஎ.] விக்ருதி-ஷு மார்கழி—தை மீ [பகுதி உ-ங.
Vol. 47. December 1950—February 1951 No. 2-3.

உள்ளுறை.

திருவள்ளுவரின் தனிச்சிறப்பு:—	திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A. B.L.	உரு—௩௦
மதிப்புரை:—		௩௦—௩உ
பீஷ்மர்:—திரு. A. V. கோபாலாசாரியரவர்கள் B.A. B.L.		௩௩—௪௦
நாலடியார் இருவருரைத்திருத்தம்:—	திரு. சத்தியவாகீசுவரையரவர்கள்	௪௧—௪௬
பிழையும் திருத்தமும்:—	ஷை	௪௬
திருவெங்கையுலா:—திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்		௪௭—௪௮
திருவேதிர்கோள்பாடிச் சிவன்கோயிற்கல்வெட்டுக்கள்:—	திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள்.	௪௯—௫௬
திருக்குறுங்குடி அழகியநம்பிபிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்):—	பத்திராசிரியர்	17—32

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1951.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,

மானேஜர்.

உ
கடவுள் துணை
செந்தமிழ்.
தொகுதி-சஎ.] விக்ருதிஸ்ரீ மார்கழி—தை மீ [பகுதி. உ-ரு.
Vol. 47. December 1950—February 1951 No. 2-3.

திருவள்ளுவரின் தனிச்சிறப்பு

[உயர்திருவாளர். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவர், மதுரை.]

இலக்கண இலக்கியநூல்கள் இயற்றித் தமிழை வளப்படுத்தித் தமிழுலகம் பெருமைபெறச்செய்த நல்லிசைப்புலவர்களில் திருவள்ளுவர் சிறந்தவர்.

'அறம் பொருள் இன்பம் வீடென்னும் இந்நான்கின்
திறம் தெரிந்து செப்பிய தேவு'

என்று மாமூலனாரும்,

'நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாத் தந்துரைத்த—நூன்முறை'

என்று உக்கிரப்பெருவழுதியும், இவ்வாறே ஏனைய புலவர்களும் இவர்க்குத் திருவள்ளுவமாலையென்ற புகழ்மாலை சூட்டியிருப்பதும், இவரை நான்முகனவதாரமென்றும் இவர் இயற்றிய திருக்குறளைத் தமிழ்வேதமென்றும் தமிழ்மக்கள் கருதுவதும் திருவள்ளுவரின் தனிச்சிறப்பை விளக்கும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், தமிழ்நூல்களுள் தலைசிறந்தது; உலகத்தில் வழங்கும் பிறமொழிகளில் அமைந்திருக்கும் சிறந்த நூல்களோடு ஒக்கமதிக்கத்தக்கது; நக்கீரர் கபிலர் பரணர் சாத்தனார் கல்லாடர் முதலான சங்கமருவிய நால்வகைவருணத்துச்சான்றோர்களாலும் பெரிதும் பாராட்டப் பெற்றது.

புறநானூறு முதலிய சங்க நூல்களிலும் சிலப்பதிகாரம் மணிமேகலை ஜீவகசிந்தாமணி கம்பராமாயணம் முதலான பெருங் காவியங்களிலும் திருமூலர்-திருமந்திரம், உமாபதிசிவாசாரியார் நெஞ்சுவிடுதூது, சேரமான்பெருமாள்நாயனார் - திருக்கயிலாய ஞானவுலா, உய்யவந்ததேவநாயனார் - திருக்களிற்றுப்படியார் முதலிய சமயநூல்களிலும் நாலடியார்முதலிய நீதிநூல்களிலும் திருக்குறளடிகளும் கருத்துக்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

பிற்காலத்துப்புலவர் சிலர், தங்கள் செய்யுள் ஒவ்வொன்றி லும் குறளடிகளையிசைத்துச் சோமேசர்முதுமொழிவெண்பா, வட மலைவெண்பா, இரங்கேசவெண்பா, குமரேசவெண்பா, சிவசிவ வெண்பா, திருப்புல்லாணிமாலை முதலிய நூல்களை இயற்றியிருப்ப தும் திருக்குறளின் மேன்மையினையும் அது புலவர்மனத்தைக் கவர்ந்துவிளங்கும் தன்மையினையும் காட்டுகின்றது.

திருக்குறளுக்குப் பதின்மர் உரைசெய்திருப்பதும் பல ஐரோப்பியபாஷைகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டிருப் பதும் உலகத்தார்க்கு அது பெரிதும் பயன்படும் உறுதியுரைக்கும் நூல் என்றும், எந்நாட்டாரும் எச்சமயத்தாரும் பெரும்பாலும் விரும்பும் நீதிகளை வெளியிடும் நூல் என்றும் தெரிவிக்கும்.

எப்பிறவியிலும் மானிடப்பிறவியே உயர்ந்தது. அதுபற்றி யே, 'அரிதரிது மானிடராதலரிது' என்று அறிவிற்சிறந்த ஔவை யாரும் பணித்தார்.

கல்வியறிவுகளால் விதிவிலக்கறிந்து, நல்லொழுக்கத்தில் நின்று சீரும் சிறப்பும் பெற்று, இம்மையில் அறம் பொருள் இன் பங்களையும் மறுமையில் நித்தியாநந்தத்தையும் அடைதற்குரிய ஒவ்வொருவரும் அவற்றை நெறியறிந்து எய்தும்பொருட்டுத் திருவள்ளுவர், அறம் பொருள் இன்பம் என்று மூன்று பெரும் பாகுபாடுகளுடையதாக 133 அதிகாரங்களில் 1330 குறள்வெண் பாக்களால் இந்நூலை இயற்றியருளினர்.

மக்கள்வாழ்க்கை, விலங்கும் பறவையும்போலத் தனித்த முறையிலன்றி ஒருவர் பிறரோடு இயைந்துவாழும் சமுதாய வாழ்க்கைமுறையாக அமைந்தது. அவ்வாழ்க்கை நன்றாக நடை பெறுதற்குத் தெய்வானுக்கிரகமும் காலமழையும் ஜீவகாருண்யம்

பொருந்திய சான்றோரும் அறவொழுக்கங்களும் இன்றியமையா தன. இந்நான்குவிஷயங்களும் முதல் நான்கு அதிகாரங்களில் இந்நூலுக்குப் பாயிரமாக விளங்குகின்றன.

அதன்மேல் அறத்துப்பால், இல்லறம் துறவறம் என்ற உட்பிரிவுகளையுடையதாய், 34 அதிகாரங்களால் விரித்துப்பேசப்படுகிறது. அறத்தோடும் பொருளின்பங்களோடும் இயைபுடைய ஊழின்செய்தி அதன் இறுதியில் ஓரதிகாரத்தாற் பேசப்படுகிறது.

பொருட்பால், அரசியல் அங்கவியல் ஒழிபியல்: என்று மூன்று பிரிவுகளையுடையது; எழுபது அதிகாரங்களால் இயன்றது.

திருக்குறள் சற்றேறத்தாழ இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பிறந்த நூலாயினும், தற்காலத்திலும் கைக்கொண்டொழுகத் தக்க நீதிநெறிகளைக்காட்டும் சிறப்புவாய்ந்து விளங்குகிறது. ஆதலால் அதனுள், பொருட்பாலிற்கண்ட விஷயங்களைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

பொருட்பாலில் திருவள்ளுவர்கூறும் அரசியல் எத்தகைத்து? அங்கங்களின் முறை என்ன? ஆட்சிமுறை எவ்வாறு நடைபெறும்? என்பன முதலியனவே இங்கு ஆராயத்தகும்.

நவீனத்தில் உயர்வாகப்பாராட்டப்படும் ஜனநாயகம் இந்நூலிற் காணப்படாவிடினும் தன்னுயிர்போல மன்னுயிர்புரத்தலும் அரசநீதி உலகநீதிகளுக்குக் குடிகளைப்போலத் தானும் கட்டுப்பட்டு அடங்கியொழுகுதலும் நீதிநெறிகளில் தவறுமையும் தன்னுடைய விருப்பு வெறுப்புக்கட்கு இடங்கொடாமல் நாட்டின் நன்மைகருதி அமைச்சர் தன் செவிகைப்பச்சொல்லும் சொற்களைக் கேட்டுநடக்கும் பண்பும், நாட்டில் செல்வத்தை உண்டு பண்ணவும் அதைத் தொகுக்கவும் தொகுத்தவற்றை உரியநெறியில் வழங்கவும் தக்க வன்மையும், அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் முதலிய பொருந்தியிருத்தலும், இன்னும் இவை போன்ற பிற இலக்கணங்களின் அமைதியும் அரசின்தன்மையாகக்காட்டி,

> 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்'

என்று கூறுவதை நோக்குங்கால், குடியரசின் உரிமைகளைத் தனியரசின் கடமைகளாக வள்ளுவர் வகுத்துரைக்கிறார்: என்பது அறியத்தகும்.

அரசனும் குடிகளும் கடப்பாடுகளை முறைபிறழாது நடத்துதற்கும் நாடு எவ்விதத்தும் மேம்பாடடைவதற்கும் கல்வி கேள்விகள் மிக்குப் பரவி, அவற்ருல் அறிவு முதிர்ந்து, சிற்றினம் சேராது, பெரியாரைத் துணைக்கொண்டு, குற்றங்கடிந்து, செயல்வகையாராய்ந்து, வலியறிந்து தெரிந்து தெளிந்து செயல்புரிந்து, அதிற் சோர்வடையாது ஊக்கங்கொண்டு ஒழுகுதல் இன்றியமையாதது.

இத்தகைய அரசியலொழுக்கங்களை விதிமுகத்தானும் எதிர்மறைமுகத்தானும் விரித்துக்கூறி, அவற்றிற் பிழையாத அரசுமுறைமையினையே செங்கோன்மையென்று அதன் பெருமையினையும் ஆவசியகத்தையும்,

'அந்தணர்நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்'

'வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி'

என்று வலியுறுத்திக் கூறுகிருர்.

செங்கோன்மையான அரசியல் செவ்விதாய்நடந்து நாடு முன்னேற்றமடைதற்குப் படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்ற அங்கங்கள் ஒழுங்காய் அமைந்திருக்கவேண்டும்.

அரசனிடத்தில் அன்பும் போராற்றலுங்கொண்ட படை, கல்வியறிவொழுக்கங்களில் மேம்பட்டு ஊக்கமும் உழைப்பும் உள்ள குடிகள், வேண்டிய செல்வம், அறிவிற்சிறந்து காலதேசவர்த்தமானங்களையறிந்து நன்மைதீமைகளைப்பகுத்தெடுத்துரைத்து நாட்டின் நன்மையையும் அரசன்புகழையும் பெருக்கும் செயல்களைத் தேர்ந்து செய்விக்கும் அமைச்சர்கள், பொருத்தமானநட்பு, மாற்றரசர் படையெடுத்துவரினும் நாடுநகரங்களைப் பாதுகாக்கத்தக்க வலிமையுடைய பொறிகளமைந்த கோட்டை கொத்தளங்கள் என்னும் செயற்கையரண், காடு மலை யாறு முதலான இயற்கையரண் ஆகிய இவற்றையும் அரசியலை நடத்துவார்க்குவேண்டிய திறமை சொல்வன்மை அவையஞ்சாமை வினைத்தூய்மை மன்னரைச்சேர்ந்தொழுகல் முதலியவற்றையும் வள்ளுவர் பல அதிகாரங்களில் விவரிக்கிருர்.

குன்றாத விளைவினைச்செய்யும் உழவரும் பலதுறையினும் பொருளீட்டும் பிறதொழிலாளரும் அறவோரும் தாழ்விலாச்செல்வரும் வாழ்வதாய் அயல்நாடுகள்தாங்கிய பாரமெல்லாம் ஓரோர் காலத்தில் தன்மேல்வரினும் அவற்றையும் தாங்குவதுடன் தன் அரசனுக்கும் குடிகளுக்கும் வேண்டியவற்றை நல்கும் வருவாயுடையதாய் 'உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேரா'ததாய்ச் சாதிபற்றியோ கொள்கைபற்றியோ தம்முள் மாறுபட்டுக் கூடும் கூட்டங்களும் உடனிருந்தழிக்கும் உட்பகையும் கலகஹேதுக்களும் இல்லாததாயுள்ளது நாடென்கிறார்.

ஒரு நாடு செங்கோற்செல்வனான அரசனும், அறிவும் சூழ்ச்சியும்மிக்க அமைச்சர்களும், ஆற்றல்மிக்க படையும், குறையாத செல்வமும், ஏனையவும் வாய்ந்துளதேனும் அந்நாட்டுமக்களிடம் ஒழுக்கவழக்கங்களிற் குறைபாடுகளிருப்பின் அது சிறவாது; ஆகையால் அவர்கள் அநுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கமுறைகளும் விலக்கவேண்டியனவும் ஒழிபியலில் விரிக்கப்பட்டுள்ளன.

இதுவரை பொருட்பாலைப்பற்றிய சிற்சில விஷயங்களைக் காட்டிக் குறிப்பாகச்சொல்லியவற்றால் திருவள்ளுவரின் உயர்தனிச்சிறப்புக்குக்காரணமான அவர்தம் விரிந்த மனோபாவமும் ஆழ்ந்த அறிவும் உயர்ந்த ஒழுக்கமுறையும் ஒருவாறு தெரிந்துகொள்ளக் கூடும்.

திருக்குறள் பொருளாற் பெரியது; வடிவாற் சிறியது;

'கடுகைத் துளைத்து எழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்'

என்று இடைக்காடரால் பாராட்டப்பெற்றது; 'ஓதியோதியுணருந்தொறுமுணர்ச்சியுதவும்' தன்மைபொருந்தியது; 'நவில்தொறும் நூல்நயம்போலும்' என்று திருவள்ளுவரேகூறிய இலக்கணத்திற்கு இலக்கியமாய்த்திகழ்வது.

இவ் அரியபெரிய நூலுள் 700 பாடல்களால் விரித்துரைக்கப்படும் பொருட்பாலைப்பற்றி ஒரு சில விஷயங்களே எடுத்துக் காட்டப்பட்டன.

தமிழ்நாட்டினர்யாவரும் திருக்குறளினை நன்கு ஆராய்ந் தறிந்து ஒழுகவேண்டுமென்பது திருக்குறள் விஷயமாக எழுந்த பழந்தமிழ்ப்புலவர்பாடல்கள் பலவற்றாலும் விளங்கும். அப் பாடல்களுட் சில வருமாறு.—

'ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப்பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு'

'ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனின்இது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ் திருவள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து'

'அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறன்எறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாம் கேட்டு'

ஸ்ரீ:

மதிப்புரை

திருக்குறள்—உரைவளம் (பொருட்பால்):— [தருமபுர ஆதீனத்தின் 254-ஆம் வெளியீடு. தொகுப்பாசிரியர்: தருமபுரஆதீனத்துக் கீழைத்திசைப் பல்கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் வித்வான் திரு. தண்டபாணிதேசிக ரவர்கள். வெளியிட்டவர்: தருமபுரஆதீனத்துக்குரிய சீகாழித்தேவதானக் கட்டளைவிசாரணைத்தம்பிரான் உயர்திரு. சோமசுந்தரசுவாமிகள். கிடைக்கு மிடம்: தருமபுரஆதீனம்.]

உலகத்துயிர்கள் மெய்யுணர்ந்து வீடுபெறுமாறு தன்கருணையால் இறைவன் பரம்பொருளானநிலையிற் பழநான்மறைகளை வெளியிட்டருளினன்; கண்ணனாக அவதரித்துக் கீதையை அருளிச்செய்தான்; திருவள்ளுவராக அவதரித்துத் திருக்குறளினை இயற்றியருளினன்: என்று பெரியோர் கூறுவர். இதனால் பழநான்மறைகளும் கீதையும் திருக்குறளும் ஒத்த சிறப்பின என்பது போதரும். அன்றி முறையே ஒன்றினொன்று சிறந்ததென்றுரைப்பினும் அமையும். ஒன்றினொன்று சிறந்தவாறு விரிப்பிற் பல்கும்.

இப்பெற்றிவாய்ந்த திருக்குறளுக்கு உரைகண்டபெரியார் பதின்மராவர். அவருள், பரிமேலழகருரை முன்னெண்ணத்தக்க பெருமையுடையது. அது பலப்பல ஆண்டுகளுக்குமுன்பே நல்லறிஞர்பலரால் அச்சிடப்பட்டுத் தமிழுலகில் நிலவிவருகிறது. இப்பால் அப்பதின்மருள் வேறுசிலர்செய்த உரைகளும் அவ்வப்போது அச்சிடப்பட்டுள்ளன. இன்னும் அச்சிடப்படாதன பல.

இவ்வாறு தனித்தனி வெவ்வேறுபுத்தகமாக அச்சிடப்பட்ட பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, காலிங்கர், பரிப்பெருமாள் என்னும் ஐவர் உரையினையும் ஒருங்குதொகுத்து ஒருபுத்தகமாக்கித் தரும் திருக்குறள் உரைவளத்தினுள்ளே பொருட்பாலுரைவளம், தொகுப்புரை ஐவருரை உரைவிளக்கம் மேற்கோட்பகுதி ஒப்புமைப்பகுதி குறிப்பு என்று முறைப்படவமைந்த ஆறு உறுப்புக்களையுடையது. அவற்றுள் ஐவருரையும் உரைவிளக்கமும் ஒழிந்த ஏனையுறுப்புக்கள் திரு. தண்டபாணிதேசிகரவர்களால் ஆராய்ந்து எழுதிச் சேர்க்கப்பட்டவை. அவ்வுறுப்புக்களுள் முன்னமைந்த தொகுப்புரை திருக்குறள்நூலுள் ஒவ்வோரதிகாரத்தும் பயின்ற குறட்கருத்துக்களாகும். மேற்கோட்பகுதி பழைய தமிழ்நூல்களிலும் உரைகளிலும் திருக்குறள் எடுத்தாளப்பட்ட இடமும் சந்தருப்பமும் விரிப்பது. ஒப்புமைப்பகுதி பழையவும் புதியவுமான தமிழ்நூல்களுள் திருக்குறட் கருத்துக்களும் அடிகள் முதலியவையும் பயின்ற செய்யுண் முதலியவற்றை விளக்குவது. குறிப்பு தேசிகரவர்கள் தாம் திருக்குறள்பயின்றகாலத்து அடைந்த பொருட்டொகுதியாகும்.

பல்வேறு புத்தகங்கொண்டு அரிதின் அறியத்தக்க உரை விகற்பங்களையெல்லாம் கற்பார் எளிதிற் கற்குமாறு மேற்காட்டிய வுறுப்புக்களுடன் இனிது நல்கும் பொருட்பாலுரைவளப் பதிப்பு முறை போற்றத்தக்கது. அதனுள், கற்பார்க்குப் பொருள்களை இனிதுவிளக்கும் நோக்குடன் மேற்கொண்டவைகளுள் அந்நோக்கொடும் தமிழ்மரபொடும் மாறுபடுவனவாயுள்ள ஒருசில மறுபதிப்பில் திருந்துமென்று நம்புகிறோம். இப்பதிப்பினுள் மேற்கோட்பகுதியும் ஒப்புமைப்பகுதியும் குறிப்பும் திரு. தண்டபாணிதேசிகருடைய பரந்துபட்ட நூலறிவையும் நுண்மாணுழைபுலத்தையும் இலக்கிய இலக்கண நூற்றேர்ச்சியையும் முப்பாலாசிரியர்திறத்தும் அதன் உரையாசிரியர்பாலும் அவர்க்குள்ள நன்மதிப்பினையும் புலப்படுத்துவனவாயுள்ளன.

'எல்லாப்பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை' என்று பாராட்டப்பட்ட திருக்குறளுட் பொருட்பாவின் பெருமை அளப்பரிது. அதன் பொருணுணுக்கங்களையெல்லாம் பண்டைப் பெரியாரான ஐவருரையோடும் தாம் அரிதில் ஆராய்ந்து தொகுத்த பலவகை விளக்கக் குறிப்புக்களோடும் உதவிய தேசிகர்திறத்தும், அவற்றைப் பெரும்பொருள் செலவிட்டு நன்கு அச்சிட்டளித்த தருமபுர ஆதீனத்து 25 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் திறத்தும் தமிழுலகம் நன்றிபாராட்டுங் கடப்பாடுடைத்து.

பதி பசு பாசமாகிய முப்பாற்பொருளையும் முறைமுறை வழங்கும் பரமாசாரியாகிய தருமபுர ஆதீனகர்த்தாவர்கள், அறம் பொருள் இன்பமாகிய முப்பாற்பொருளையும் மக்கள்யாவரும் தெற்றெனத்தெளிய உரைவிகற்பங்களுடன் முறையே வழங்குமுற்பட்டுச் செய்தக்கசெய்த சிறப்புடையராயினுர்கள். இவர்கள் உலக நலனென்றே குறிக்கொண்டு செய்துவரும் ஒப்புரவுகளுள் தலையாய நூற்கொடையாகிய இதனினுஞ்சிறந்தது பிறிதில்லை. தொன்றுதொட்டு இன்னோன்ன வண்மையாற் பெரும்புகழ் வாய்ந்த தருமபுர ஆதீனம் மேலும் அம்முறையே நெடிதுநிலவுக.

ஸ்ரீ:

பீஷ்மர் *

உயர்திரு. A. V. கோபாலாசாரியர் அவர்கள் B.A., B.L. திரிசிரபுரம்.

குருகுலவேந்தருள் சந்தனு என்பவனுக்குக் கங்காதேவியிடம் பீஷ்மர் பிறந்தார். பீஷ்மர் என்பதற்கு அச்சத்தை விளைப்பவர் என்று பொருள். இவருக்குத் தாய் இட்டபெயர் தேவவிரதர் என்பது. இவருடைய தந்தையாகிய சந்தனு, சத்திவதி என்பவளை மணந்துகொள்ளவிரும்பினன். அரசுரிமைவிழைந்த சத்தியவதியும் அவளைப்பெற்றோரும் சந்தனுவின்கருத்துக்கு இணங்கவில்லை. அவர்கள் இணங்கும்படி பீஷ்மர் தம் அரசுரிமையைத் துறந்தார்; தமக்குப் புத்திரப்பேறுண்டாகாதபடி தாம் தம் ஆயுட்காலம் முழுதும் பிரமசரியவிரதம் மேற்கொள்வதாகக் கடுமையான சூளுறவும் கொண்டார். அதனைப் பார்த்திருந்த தேவர்களும் இருடிகளும் பீஷ்ம! பீஷ்ம! (அச்சத்தைவிளைப்பவரே! அச்சத்தைவிளைப்பவரே!) என்று இவரை அழைத்தமையால் இவருக்குப் பீஷ்மர் என்று திருநாமம் உண்டாயிற்று.

இவரைக்கண்ட பகைவர் நடுங்குவர். அதுபோல இவருடைய இந்திரியங்களும் இவரைக்கண்டு நடுங்கும். இவருடைய தாயான கங்கையே இவரை வளர்த்தாள்; பரசுராமனைக்கொண்டு அத்திர வித்தைமுழுவதையும் இவருக்குக் கற்பித்தாள்.

பரசுராமனுக்கும் பீஷ்மருக்கும் ஒருகாலத்துப் போர் மூண்டது; அதில் பீஷ்மர் வென்றார். பரசுராமன் "தோற்றேன்; தோற்றேன்; என் மாணவனை பீஷ்மனிடம் தோற்றேன்; மதி கெட்டு அவனோடு போர்தொடுத்தேன்" என்று ஓய்ந்தார்.

---

*திருச்சி வானொலிநிலயத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டதனைத் தழுவி அவ்வானொலிநிலயத்தார் அநுமதிபெற்று வெளியிடலாயிற்று.

கௌரவ பாண்டவர்களையும், அவர்களுக்குத் தந்தைமாரான திருதராட்டிர பாண்டுக்களையும், அவர்களுக்குத்தந்தை விசித்திர வீரியனையும் இவர் வளர்த்தார். அவர்களுடைய அரசியற்பொறை யினையும் படைத்தலைமையினையும் தாங்கி அவர்களாட்சியும் நாடும் உயர்நிலையடையச்செய்தவரும் இவரே.

இவர் பாரதப்போர்நிகழ்ந்தகாலத்தில் மிக்க முதுமைப் பருவத்தினராயிருந்தார்; கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் பாட்டனார்; அபிமன்யு முதலியோர்க்குக் கொள்பாட்டனார்; ஆயினும் அநுமானைப்போலப் பொறியடக்கமும் பிரமசரியவிரதமும் வாய்ந்தவராயிருந்தமையால் உடல்வலியும் மனத்திட்பமும் உடையராயினர்.

துரியோதனன் பதினொரு அக்ஷௌஹிணியாக வகுக்கப் பட்ட தன்னுடைய படையில் ஒவ்வொரு அக்ஷௌஹிணிக்கும் ஒவ்வொருபடைத்தலைவராகப் பதினொரு அக்ஷௌஹிணிக்கும் பதினொருபடைத்தலைவரை ஏற்படுத்திவிட்டு, அவற்றுக்கெல்லாம் சேர்ந்து ஒருதனித்தலைவன் இல்லாவிடில் போரில் பகைவரால் தன் படைகள் எறும்புச்சாரிபோலச் சிதறியழியும் என்று கருதிப் பீஷ்மரைத் தன் படைவகுப்புக்கெல்லாம் தலைமைதாங்கும் படைத் தலைவனாக்கினன்.

பீஷ்மர் துரியோதனனைநோக்கி 'உங்களைப்போலவே பாண்ட வர்களும் என்மடியில் வளர்ந்த பேரன்மார்கள்; அவர்கள் அறநெறி பிறழாதவர்கள்; அவர்களை நான் கொல்லமாட்டேன்; மற்றைப் போர்வீரர்களைப் பதினாயிரக்கணக்கிற் கொல்வேன்' என்று கண்டிப்பாய்ச்சொல்லிவிட்டார். பெண்ணாய்ப்பிறந்து பின் இறைவ னருளால் ஆண்பிள்ளையானவனும் துருபதன்மகனுமான சிகண்டி யென்பவன் போரில் என்முன் நின்றால் படைக்கலங்களைக் கீழே எறிந்துவிடுவேன்; அவன் என்னையணுகி என்னெதிர்நிற்காமல் நீங்கள் கவனித்துக்கொள்ளவேண்டுமென்றும் கூறினர். 'இவர் படைத்தலைவராயிருந்து போர்புரியும்வரை நான் போரில் புகமாட் டேன்' என்று கர்ணன் சொல்லிவிட்டான். இவற்றையெல்லாம்

மதிக்காமல் இவரையே எல்லாப்படைத்தலைவர்க்கும் தனித் தலைவராயிருக்கும்படி துரியோதனன் வேண்டினான். இவரும் இசைந்தார். 'தேவசேனாபதியான சுப்பிரமணியனை வணங்கி நான் படைத்தலைமைதாங்க இசைகிறேன்' என்று கூறினார். படைத் தலைமைதாங்குவோர்க்குரிய அபிஷேகம் இவருக்கு நடந்தது.

"இந்தப் படைத்தலைமைதாங்குதலை நிகரற்றவீரரான இவர் மறுக்கமுடியாது; சிகண்டி இவரை நெருங்காமல் காக்கவேண்டும்" என்று துரோணன் துச்சாசனன் முதலியோரைத் துரியோதனன் வேண்டிக்கொண்டான். இந்தச் சிகண்டியால் எழுந்த அச்சமே, கீதையின் தொடக்கத்தில் "நீங்களெல்லீரும் பீஷ்மரைச்சூழ்ந்து நின்று அவருக்குத் தீங்குநேராதவாறு பாதுகாத்துவரவேண்டும்" என்று துரியோதனன் மீட்டும் கேட்டுக்கொள்ளக் காரண மாயிற்று.

குருக்ஷேத்திரத்தில் கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் போர் மூண்டது. போர்தொடங்குமுன் தருமபுத்திரன், போர்க்களத்தில் கவசத்தைக் கழற்றிப் படைக்கலங்களையும் வைத்துவிட்டுத் தேரினின்றும் இறங்கினான்; நடந்துசென்று பீஷ்மரையடைந்து அவர் திருவடிகளை வணங்கினான்; "எதிர்க்கமுடியாத ஆற்றலுடையவரே! உம்மோடு நாங்கள் போர்தொடங்குதற்கு நீர் அநுமதிதரவேண் டும். தாத்தா! உம்முடைய வாழ்த்துக்களை எங்களுக்கு அளிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். பீஷ்மர், "பவுத்திரனே! உன்னிடம் எனக்கு மிக்க அன்புண்டு. போர்செய்; வெற்றியடைவா யாக; உன் பகைவர்சோற்றையுண்டு நான் அவர்கள்பாற் கட்டுப் பட்டுவிட்டேன்; வேண்டிய வரத்தைக்கேள்" என்றார். 'உம்மை வெல்லும்வகை எங்களுக்குச் சொல்லவேண்டும்' என்று தருமன் கேட்க, 'மறுபடிவா' என்று பீஷ்மர் கூறினார்.

பீஷ்மரும் துரோணரும் நாடோறும் காலையில் எழுந்தவுடன் 'பாண்டுபுத்திரர்கள் வெற்றியடையவேண்டும்' என்று கடவுளை வணங்குவர். பாரதத்தில் பீஷ்மபர்வம் 122 அத்தியாயங்களை யுடையது. அது பாரதப்போர் நிகழ்ந்த 18நாட்களில் 10 நாள் பீஷ்மர் தலைமையில் நடந்த போரை வருணிப்பது.

முதல்நாள் அபிமன்னுவுக்கும் பீஷ்மருக்கும் கடும்போர் நடந்தது. சிறுவனான அபிமன்னுவைப் பீஷ்மர் மெச்சினார். ஆனாலும் அவன் மீது அளவற்ற அம்புமழைபொழிந்தார். எல்லோருக்கும் இது அதிசயக்காட்சியாயிருந்தது. விராடராஜன்புதல்வனான ஸ்வேதன் பாண்டவர் படையின் ஒருபிரிவுக்குத் தலைவன். அவனுக்கும் பீஷ்மருக்கும் இடையே கொடியபோர் மூண்டது. வீமன் அபிமன்யு சாத்தகி திருஷ்டத்தியும்நன் என்னும் மஹாவீரர்கள் ஸ்வேதனுக்குத் துணையாக வந்து பீஷ்மரை எதிர்த்தார்கள். பீஷ்மர் அத்தனை பேரையும் ஓடஓடவிரட்டிவென்று ஸ்வேதனையும் கொன்றார். அவ்வளவில் சூரியன் மறைந்தான். போரும் நின்றது.

அக்காலத்தில் இரவில் போர்புரிவதில்லை மக்கள்வாழும் நகரம் முதலிய இடங்களிலும்போர் நிகழ்த்துவதில்லை. ஆள்வழக்கற்ற குருக்ஷேத்ரம் போன்ற சமவெளிகளே போர்க்களமாகக் கொள்ளப்படும்.

இரண்டாம்நாள் பீஷ்மரோடு அர்ஜுனன் போர்புரியத் தொடங்கினான். இருவரும் ஊக்கம் மிக்கவராய்ப் போரில் ஈடுபட்டனர்; ஒருவர்மேலொருவர் அஸ்திரங்களையும் பிரதி அஸ்திரங்களையும் ஏவினர்; ஒருவர்கையும் தாழவில்லை; இருவரும் ஒத்தவலியினர் என்று யாவரும் நினைக்கும்படி பெரும்போர்புரிந்தனர்; பார்த்தசாரதியாகிய கண்ணன்மார்பையும் பீஷ்மர் அம்புகளால் துளைத்தார். அதைக்கண்ட அர்ஜுனன் மிகமிகச் சினந்தான்; பீஷ்மர்மீது அளவற்ற அம்புகளை ஏவினான். இருவரும் சலிக்கவில்லை; 'ஒத்த ஆற்றலையுடையார்புரியும் இப்படிப்பட்ட பெரும்போர் உலகில் எங்கும் கண்டதில்லை; இனிக் காணப்போவதுமில்லை' என்று தேவர்களும் புகழ்ந்தார்கள்.

'அருச்சுனன் தன் ஆற்றலைக் காட்டவில்லை; பொறுப்பற்றவன் போலிருக்கிறான்' என்று தருமன்முதலியோர் குறைகூறினர். மூன்றாநாள் அருச்சுனன் ஊக்கத்தோடு பொருதான். கௌரவர் படை அலறியது. துரியோதனன் பீஷ்மரிடம் முறையிட்டான். பீஷ்மர் 'பாண்டவர்களை வெல்லல் அரிது; போரை மேற்கொள்ள வேண்டாம் என்று பலமுறை நான் சொன்னேன்; நீ கேட்கவில்லை;

இந்த முதுமைப்பருவத்தில் என் ஆற்றலைக்காட்டுகிறேன் பார்; நான் ஒருவனுகவேநின்று பாண்டவர்களைத் தகைந்து அவர்கள் புறங்கொடுத்தோடும்படி செய்கிறேன்' என்று கூறினுர். அவருடைய வில் வளைந்தது; தேர் போர்க்களமெங்கும் விரைந்து சுழன்றது; வில்லிலிருந்து அம்புமழை மிக்கது; பல்லாயிரம் பீஷ்மர் பொருவதுபோலிருந்தது. அருச்சுனனுல் அவரை அடக்கமுடியவில்லை. அதுகண்ட கண்ணன் 'இனிப் பொறுக்கமுடியாது; இன்றே யுதிட்டிரன்படைமுழுதும் அழிந்துவிடும்' என்று தன்னுடைய கூரிய சக்கரப்படையை எடுத்துக் கொண்டு தேரிலிருந்து குதித்துப் பூமி நடுங்கும்படி பீஷ்மரை எதிர்த்துக் கொல்ல ஓடினுர். தன்னைக் கொல்லுதற்குச் சக்கரபாணியாய்க் கண்ணன் விரைந்துவருவதைக்கண்டும் பீஷ்மர் பரபரப்படையவில்லை; தன்வில்லை நாணேற்றினுர்; அழியாத ஆற்றலுடைய கண்ணனைப்பார்த்துத் "தாமரைக்கண்ணு! வருக! வருக! உமக்கு வணக்கம் கூறுகிறேன்; இது போர்க்களம்; இப்பொழுது உலகமுதல்வனுன உம்முடைய திருவடிகளிற் பணிவதற்கில்லை. உம்முடைய வல்லமையால் என்னைத் தேரிலிருந்து உம்மை நோக்கிக் கீழேவிழும்படிசெய்க" என்ருர். அதுகண்ட அருச்சுனன் ஓடிவந்து கண்ணனடிபிணைகளைப்பற்றிக்கொண்டு அவர் பீஷ்மரை நோக்கிச்செல்வதைத் தடுத்துநிறுத்தித் திருப்பியழைத்துக் கொண்டு சென்ருன். 'படைதொடேன்' என்ற தன்சூளுறவையும் கடந்து, அன்பர்தலைவரான பீஷ்மரைக் கண்ணன் கௌரவித்தான். இதை பீஷ்மர் தம் உயிர் உடலைவிட்டுப்பிரியுமுன் 'கண்ணு! நீர் உம்முடைய சூளுறவைக் கைவிட்டு உம்முடைய அடியானுகிய என்னுடைய சூளுறவை மெய்யாக்கும்பொருட்டுச் சக்கரத்தைத் தாங்கித் தேரினின்று குதித்து ஓடிவந்தது என் நெஞ்சை உருக்குகிறது' என்று பாராட்டினுர். எட்டுநாள் நிகழ்ந்தபோரில் துரியோதனனுடைய தம்பிகள் சிலர் சிலர் கொல்லப்பட்டார்கள். பீஷ்மரை வீழ்த்தமுடியவில்லை.

எட்டாநாள் இரவு துரியோதனன் பீஷ்மரிடம்வந்து 'நீர் நின்றுவிட்டால் கர்ணன் போர்செய்து விரைவில் வெல்வேன்' என்கிருன் என்று பீஷ்மரை நிந்தித்தான். அதுகேட்ட பீஷ்மர், 'பகவான்

கண்ணன்பாதுகாப்பிலுள்ள பாண்டவர்களை எவராலும் வெல்ல முடியாது என்பதை நாரதர் முதலிய முனிவர்களும் நாங்களும் முன்னமே உனக்குக் கூறினோம். நீ கேட்கவில்லை; ஆயினும் சிகண்டி ஒருவனைத்தவிர மற்றவீரரனைவரையும் வெல்வேன், கொல்வேன்' என்றார்.

ஒன்பதாநாட்போரிலும் பீஷ்மருடைய போராற்றலால் படைகள் மடிவதுகண்டு பொறாத கண்ணன், மறுபடியும் தேரிலிருந்து குதித்தார்; பீஷ்மரைக் கொல்ல ஓடினார். அப்பொழுது பீஷ்மர் 'இப்படிச் சக்கரத்தையெடுத்துக்கொண்டு என்னை எதிர்த்து வருவதால் மூவுலகங்களிலும் எனக்குப் புகழையுண்டாக்கிவிட்டீர்' என்றார். அவ்வமயம் அருச்சுனன் ஓடிவந்து கண்ணன் கழலிணைகளைக் கட்டிக்கொண்டு மன்றாடி அவரைத் திருப்பியழைத்துச்சென்றான்.

ஒன்பதாநாள் இரவு பாண்டவர்களும் கண்ணனும் பீஷ்மரையடைந்து 'உம்மை வெல்லுதற்கும் கொல்லுதற்கும் நீரே உபாயம் அருளிச்செய்யவேண்டும்' என்று வேண்டினர். பீஷ்மரும் 'பிறக்கும்போது பெண்ணாய்ப்பிறந்து பின் ஆணான சிகண்டி என்னெதிர் நின்று போர்செய்தால் யான் ஆயுதங்களைத் தொடாது கைவிடுவேன்; போர்செய்யேன்; அப்பொழுது என்னை வெல்லுதல் உங்களுக்கு எளிதாகும்' என்றார்.

பத்தாவதுநாள் போர்தொடங்கும்போதே பாண்டவர்கள் சிகண்டியை முன்னே நிறுத்திக்கொண்டு பீஷ்மரையெதிர்க்கப்புறப்பட்டார்கள். சிகண்டியின் அம்புகளும் அவனுக்குப் பின்நின்ற அருச்சுனனுடைய சரங்களும் படைக்கலங்களைக் கீழே போகட்டுவிட்டுநின்ற பீஷ்மர்மீது அடிக்கடி தைத்துக்கொண்டேயிருந்தன. அன்று பீஷ்மர், 'என்னுடலில்தைக்கும் அம்புகள் சிகண்டியின் அம்புகளாயிருக்கலாகாது; அருச்சுனனுடைய சரங்களாயிருக்கவேண்டும்' என்று பலமுறை சொல்லிக்கொண்டே தன் உடலில் தைத்த பாணங்களைப் பிடுங்கிப் பிடுங்கி எறிந்துகொண்டிருந்தார். ஒவ்வொருநாளும் பல்லாயிரம் வீரரைக்கொன்றமையால் அவர் மனம் வெறுப்படைந்தது; தம்முடைய கிழத்தன்மைவாய்ந்த

உடலைவிட்டுச் சிறந்தகதியடைய உறுதிபூண்டார். காலன் வரவை எதிர்பார்த்தார். இவரைச்சேர்ந்தவசுக்களும் இருடிகளும் 'பொருந்துமாறு நினைந்தீர்! நீர் பூவுலகில் வாழ்ந்தது போதும்; இனி நீர் போரினின்றும் ஓய்வடையலாம்' என்றார்கள். சிகண்டியின் அம்புகளும் அருச்சுனனுடைய சரங்களும் மேலும் மேலும் தாக்கின; எனினும் பீஷ்மர் தேரிலிருந்து கீழேவிழவில்லை. இது வியக்கத்தக்கதாயிருந்தது. சிகண்டியையும் அருச்சுனனையும் பீஷ்மரைவிட்டுவிலக்கத் துச்சாதனனெதிர்செய்த முயற்சி பலிக்கவில்லை; தருமன்முதலியோர் துச்சாதனனெதியரை ஓடவோட வெருட்டினர். ஓயாமல் தைத்த பாணங்களால் பீஷ்மர் திருமேனி இடைவெளியின்றித் துளைக்கப்பட்டது. பீஷ்மர் கிழக்குமுகமாய்த் தலைசாய்ந்து தேரிலிருந்து பூமியில்விழுந்தார். அம்புகள் நெருக்கமாய்த் தைத்திருந்தமையால் அவருடலைப் பூமிதேவி தீண்டவில்லை.

வீரருள்வீரரான இவர், அம்புப்படுக்கையில் இருந்தபொழுது இவருட்புகுந்த தெய்வத்தன்மையால் ஒளிமயமாய்விளங்கினர். தேவரும் முனிவரும் 'இப்பெருமான் தக்ஷிணாயனத்தில் எப்படி உடலைத்துறப்பார்' என்றனர். அது கேட்ட பீஷ்மர், 'நான் கீழே விழுந்தாலும் உத்தராயணம்வரும்வரை காத்திருப்பேன்; யான் விரும்பியகாலத்து மரணம் அடையலாம் என்று என் தந்தை தந்த வரத்தை உபயோகித்துக்கொள்வேன்' என்றார். பாண்டவர்களும் கௌரவர்களும் இருபுறத்தும் வந்துநின்று பீஷ்மரை வணங்கினர்கள். சரப்படுக்கையில் தலைதாழ்ந்தநிலையில் அது சமநிலைப்படுமாறு பீஷ்மர் தலையணை தரவேண்டினர். துரியோதனன் பட்டுத்தலையணைகளைத் தருவித்தனன்; எனினும் அருச்சுனன் அளித்த அம்புகளாலாகிய தலையணையை ஏற்றுக்கொண்டார்.

இவருடலில் தைத்திருந்த அம்புகளை வெளிப்படுத்தி நீக்கிச் சிகிச்சைசெய்யும்பொருட்டு எல்லாக்கருவிகளும் கொண்டு அரண்மனைவைத்தியர்கள் இவரையணுகினார்கள். அந்தக்காலத்தில் ரணசிகிச்சைமுறை மிகமிக வளர்ச்சியடைந்திருந்தது. பீஷ்மர், 'எனக்கு ரணசிகிச்சைசெய்யவேண்டாம்' என்று கூறினர்; அந்த வைத்தியர்களுக்கு வெகுமதியளித்தனுப்புவித்தார்; தைத்த சரங்களுடன்

தம்முடலைத் தகனஞ்செய்யும்படியும் கட்டளையிட்டார். அன்றியும், 'என்முடிவோடு உங்கள்போரும் முடிக; எல்லோரும் ஒன்றுபடுங்கள். தந்தையும் மைந்தனும், மாமனும் மருமகனும், அண்ணனும் தம்பியும் ஒன்றி வாழ்க' என்றும் நல்லுரை பகர்ந்தார். துரியோதனன் அதற்கு இசையவில்லை.

எல்லாரும் சென்றபின் இரவில் கர்ணன் கண்ணீர்பெருக வந்து பீஷ்மர் திருவடிகளில் விழுந்தான். அவனை நோக்கி பீஷ்மர், 'நீ குந்திமகன்; ராதைமகனில்லை; பெருவீரனுனநீ எல்லோருக்கும் மூத்தவன்; நீயே அரசாள இசைந்து போரை நிறுத்தும்படிசெய்' என்றார். அதுகேட்ட கர்ணன், 'விதியை யார் வெல்வார்? போர் நிற்காது; நான்செய்த பிழைகளைத் தேவரீர் பொறுத்தருளவேண்டும்' என்றான். ஏனும், பீஷ்மர் 'உன்விருப்பப்படி போர்செய்; அரசர்க்குரிய அறநெறியில் நில்' என்றார். இவ்வளவில் பீஷ்மபர்வம் முற்றுப்பெற்றது.

பீஷ்மர் தம்முடைய தந்தை தமக்குத் தந்த வரத்தின் ஆற்றலால் உத்தராயணம் வந்தபின் கண்ணன் முன்பு அவரைத் துதித்துக்கொண்டே உடலைவிட்டார். தம் உடலைவிடும்வரை இருடிகளும் அரசர்களும் கண்ணனும் கூடியிருந்த சபையில் தர்மபுத்திரனுக்கு மோக்ஷதர்மம் உள்ளிட்டு எல்லாத் தர்மங்களையும் உபதேசித்தார்; இவரினும் மேம்பட்ட வீரர் இல்லை; அறிஞர் இல்லை; பொறியடக்கியவரில்லை. வியக்கத்தக்க பிரமசரியநிலையினரான இவரை நினைந்து எல்லோரும் இன்றும் தர்ப்பணம் செய்கிறார்கள். பாரதநாட்டுக்கே இவர் இணையற்ற அணிகலனாய்த் திகழ்கிறார். இவருடைய சரித்திரம் மிகமிகப் புனிதமானது.

நாலடியார்—இருவருரைத்திருத்தம்

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்

[கசு-ஆம்பக்கத் தொடர்ச்சி]

அதிகாரம்—செல்வநிலையாமை. பாட்டு—3

24 யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

இதன்பொருள்:—யானையெருத்தம் பொலிய—யானையின்பிடரி அழகுபெற, குடைநிழற்கீழ் - வெண்கொற்றக்குடைநிழலில், சேனைத்தலைவராய்ச் சென்றோரும் - நால்வகைப்படைகளுக்கும் தலைவராய்ப் போருக்குச்சென்ற பெருவேந்தரும், ஏனை வினை உலப்ப - (அந்தநிலைமைக்குக்காரணமாயிருந்த)நல்வினை தீர்தலால், வேறாகி - அந்நிலையினின்றும் வேறுபட்டு, தாம் கொண்ட மனையாளை - தாம் மணந்துகொண்டமனைவியையும், மாற்றார் கொள வீழ்வர் - பகைவர் கொள்ளத் தோல்வியுற்றுக் கெடுவர் என்றவாறு.

பெருவாழ்வுபடைத்தோரும் காலவேற்றுமையால் பொட்டெனத் தாழ்ந்து கெடுவர்; இது இவ்வுலகியற்கை என்பது கருத்து.

கீழ் - ஏழனுருபு. சென்றோரும் எழுவாய். வீழ்வர் - பயனிலை. கொள என்பதற்கு முந்தின உரைகாரர்கள் 'கொள்ளும்படி' என்றனர். மனையாளை மாற்றார்கொள்ளுதல் யாண்டும் நிகழ்வதன்று; ஆகையால் காரணகாரியப்பொருள்கொள்ள இடமின்று. அது உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது.

இனி, சென்றோரும் என்பதற்கு வீதிகளில் உலாச்சென்றோரும் என இளவழகனார் முதலிய உரைகாரரெல்லாரும் பொருள் கூறினர். அது பொருந்தாது. மாற்றார்கொள வீழ்வர் என்பதனைச் சேனைத்தலைவராய்ச் சென்றோரும் என்பதனுடன் கூட்டிப் பார்த்தால், போர்க்கெழுந்தார் ஏனைவினை உலத்தலால் மனையாளை மாற்றார்கொள வீழ்வர் என்ற பொருளே கிட்டுகிறது. மனையாளை மாற்றார்கொள வீழ்தற்கு இதுவே ஏற்ற சந்தருப்பம்.

சென்றோரும், உம் - சிறப்பு. மனையாளையும் என்பதனுள் சிறப்பும்மை தொக்கது. நால்வகைப்படை தேர், யானை, குதிரை, காலாட்படைகள். இப்பாட்டின் முடிபுகள் "ஒருநாயகமாயோட வுலகுடன் ஆண்டவர் ... ... இம்மையிலே பிச்சைதாங்கொள் வர்" * என்பதை ஒத்திருக்கின்றன.

அதிகாரம்—இளமைநிலையாமை. பாட்டு—10.

25 ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்—பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்தல் நன்று.

இ—ள்:—ஆள் பார்த்து உழலும் - (சாவடுத்திருக்கிற) ஆள் களைத் தேடித்திரிகிற, அருள் இல் கூற்று - தயவற்ற யமன், உண் மையால் - இருக்கிறபடியால், தோட்கோப்பு (தம்மவரில்லாத அய லூர் செல்வார்க்கு அங்கே பசியாற்றக்கொள்ளவேண்டுவதான) பொதிசோறு போன்ற அறத்தை, காலத்தால் கொண்டு - உரிய காலத்திலேசெய்துகொண்டு, உய்மின் - நமன்வரவினால் நேரும் துன்பத்தினின்றும் தப்பிக்கொள்ளுங்கள், (அன்றியும்) பீள் பிதுக்கிப் பிள்ளையைத் தாய் அலறக் கொள்தலால் - வயிற்றினுள் இளங்கருவாயிருப்பதனையும் வெளிப்படுவித்துப் பிள்ளையைத் தாய் அலறியழும்படி கொள்ளுதலால், அதன்கள்ளம் கடைப்பிடித் தல் நன்று - அந்த யமனுடைய கள்ளத்தனத்தை மறவாமை (முற் பட்ட அறஞ்செய்தல்) நல்லதாம் என்றவாறு.

தோட்கோப்பு - பொதிசோறு. தோளிற்கோத்துக்கொண்டு செல்வதனால் பொதிசோற்றிற்கு அது பெயராயிற்று. அதற்கு ஆற்றுணா என்றும் பெயருண்டு. பசிதணிக்கும் உணவென்பது அதன்பொருள். தோட்கோப்பு என்பது அன்மொழித்தொகை யாய்ப் பொதிசோற்றையுணர்த்திப் பின் உவமையாகுபெயராய் இங்கே செய்யும் அறத்தையுணர்த்திற்று.

'மறுமையாகிய வழிக்குக் கட்டுச்சோறு' 'வழிப்பிரயாணத் திற்குக் கொண்டுபோவது' என இளவழவகனாரும் இருவரும் பிற ரும் கூறினர். அது பொருந்தாமை, "தமரூர்க்கே செல்லினும்

* திருவாய்மொழி. 4—1—1.

வெகுண்டீர்போல ஆற்றுணக் கொள்ளா தடிபுறத் துவைப்பிரே" (சீவக, 6 - 139) என்பதன் உரையால் அறிக.

தமரில்லாத அயலூர்போன்றது சுவர்க்கம். அங்கே செல்லப் புறப்படுவார்க்குத் தம்மிடம் தாம் செய்த அறம் இருக்கவேண்டும். அறமாகிய புண்ணியம் தீர்ந்தால் மீள இங்கே வரவேண்டும். வீடு பெற்றடும்வரை மக்கட்குச் சொந்தவூர் இவ்வுலகமே.

அதன் கள்ளமாவது மறைந்துநின்று நாம் எதிர்பாராதநிலை யில் பொட்டென வந்து தன்காரியம் சாதித்தல். காலத்தில் என்பது காலத்தால் என உருபுமயங்கிநின்றது. பிள்ளையையும் என எச்சவும்மை வருவிக்கப்பட்டது.

அதிகாரம்:—அறன்வலியுறுத்தல். பாட்டு—6.

26 இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் தீயவை யொல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.

இ—ள். இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது (நம்மைக்கொண்டுசெல்ல நமன்வருவது) இன்றைக்கோ நாளைக்கோ என்றைக்கோ என்று ஐயமும் பொருட்படுத்தாமையும் கொள்ளா மல், பின்றையே நின்றது கூற்றம் என்று எண்ணி - நமன் நம் பின் பக்கத்திலேயே நிற்கிறான் என நினைத்து, ஒருவுமின் தீயவை - (அவன் உங்களைத் துன்புறுத்தாமல் இருக்கவேண்டுமாயின்) பாவச் செயல்களைச்செய்வதின்றும் நீங்குங்கள், மாண்டார் அறம்- (சரீரம் நீங்கினபிறகு நற்கதிகிட்டவேண்டுமாயின்) மெய்யுணர்ந்த பெரி யோர்களால் சொல்லப்பட்ட அறங்களை, ஒல்லும்வகையால் - இயன்றவழிகளால், மருவுமின் - செய்யுங்கள் என்றவாறு.

இயன்றவழிகளாவன - மனம் வாக்குக் காயங்கள். மருவுதல் மேற்கொள்ளுதல். இன்று - நிகழ்கிறதினம். அன்று - மறுதினம். சமீபத்ததான நிகழ்கிறதினத்தை இன்று என்பது உணர்த்து மாயின் அதினின்றும் சிறிதுதூரத்ததான மறுதினத்தைச் சேய் மைப்பொருளுணர்த்தும் அகரச்சுட்டடியாகப்பிறந்த அன்று என் பது உணர்த்தத் தடையில்லை. அக்காலத்தில் மறுதினத்தை அச் சொல்லால் வழங்கிவந்தனர்போலும்.

அன்று என்பதற்கு அச்சொல்லையே இளவழகனுரையுள்ளிட்டா ரெல்லாரும் பிரதிபதமாகக் காட்டினர். அன்றியும், 'இன்றும் அன்றும் இளமை முதுமைகளைச் சுட்டின' என்றும் வரைந்தனர். அவர்கள் அவ்வாறு வரையக் காரணம் விளங்கவில்லை. அறிஞர் ஆராயக்கடவர். நமன்வரவு இக்கணத்திலோ அடுத்தகணத்திலோ என்று பொருள்கொள்ளுதற்குரிய இவ்விடத்தில் வெகுதூரத்த தான இளமையும் முதுமையும் எவ்வாறுபொருந்தும்?

எதிரே என்றது பின்றையே நின்றது என்றார் நாம் அறிய முடியாமல்நிற்றல்பற்றி.

அதிகாரம்—துறவு. பாட்டு—4.

27 துன்பம் பலநாள் உழந்தும் ஒருநாளை
யின்பமே காமுறுவர் ஏழையர்—இன்பம்
*இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா
றடைவொழிந்தார் ஆன்றமைந் தார்.

இ—ள். ஏழையர் - அறிவில்லாதவர், துன்பம் பலநாள் உழந்தும் - (குடும்பப் பாதுகாப்பிலுள்ள ஆள்வினைகளால் உண்டாகும்) துன்பங்களால் பலநாள் வருந்தியும், ஒருநாளை இன்பமே காமுறுவர் - ஒருநாளைச் சிற்றின்பத்தையே இன்றியமையாததாக விரும்பி இல்வாழ்வில் நிற்பர் (ஆனால்), ஆன்று அமைந்தார்-கல்வி கேள்விகளால் நிறைந்து அடங்கின பெரியோர், இன்பம் இடைதெரிந்து (மனையாற்று ஒழுக்கத்திலுள்ள துன்பங்களுக்கும்) இன்பத்திற்கும் உள்ள அளவைச் சீர்தூக்கி, இன்னாமை நோக்கி - துன்பம் அதில் மிக்கிருப்பதைக் கண்டு, மனையாறு அடைவொழிந்தார்- இல்லாளோடு வாழ்கிறநெறியில் ஒழுகுவதை விட்டார் என்றவாறு.

இடை - அளவு. ஒருநாளையின்பம் என்றது "பெண்கடமை மதியிலொருகாலன்றிமருவேம்" என்றதுபற்றிப்போலும். இன்பம் இடைதெரிந்து - துன்பத்தோடு இன்பத்தின் அளவை ஆராய்ந்து என்பது பொருள்.

---

* 'இன்பம் இடைதிரீந் தின்னாமை நோக்கி' என்று பாடங்கொண்டு, 'திரிந்து' என்னும் செய்தெனச்சத்தைத் 'திரிய' எனச் செயவெனெச்சமாகத் திரித்து, 'அவ்வொருநாளையின்பமும் இடையே வேறுபட அதனால் விளையும் துன்பத்தையறிந்து' என்று பொருள்கூறுவாரும் உளர்.

இளவழகனர் இன்பம் இடைதெரிந்து இன்னாமை நோக்கி என்பனவற்றிற்கு 'இன்பம் அங்ஙனம் இடையே சிறிது உளதாதல் தெரிந்து' என்றும் 'துன்பத்தின் மிகுதியை அறிந்து' என்றும் உரைகூறினர். துன்பத்தின் மிகுதியறிதலாகிய துணிவுணர்ச்சி பிறக்கவேண்டுமாயின் அதன் முன்னதாகத் துன்ப இன்பங்களின் ஏற்றத்தாழ்வுபற்றிய ஆராய்ச்சி பிறக்கவேண்டும். அதனைத் தெரிவிக்கவே "இன்பம் இடைதெரிந்து" என்றார். அதனால் இடை தெரிந்தென்பதற்கு அவர் கூறியது பொருந்தாமையறிக.

இனி, மனையாறடைவொழிந்தார் என்பதற்கு 'மேன்மேலும் இளமைதுய்த்தலிற் பற்றுள்ளம் நீங்கினர்' என்றார் பிறர். அடைவொழிந்தார் என்றது மனையாற்றில் இருந்து பற்றுவிட்டவரைக் குறிக்கவில்லை. அதிற் புகாதவரைக் குறிக்கின்றது.

அதிகாரம்—நட்பிற்பிழைபொறுத்தல். பாட்டு—4.

28 மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சம்
சுடுதற்கு மூட்டிய தீ.

இ—ள். மடிதிரை - மறிந்து விழுகிற அலைகள், தந்திட்ட - கொண்டுவந்து போகட்ட, வான்கதிர்முத்தம் - வெண்ணிறவொளியையுடைய முத்துக்களையுடைய, கரை - கரையை, கடுவிசைநாவாய் - மிக்க விசையுடன் செல்லுகின்ற தோணிகள், அலைக்கும் சேர்ப்ப - கரைத் தழிக்கின்ற கடற்றுறைக்குத் தலைவ, விடுதற்கு அரியார் - விடமுடியாதவராயிருக்கும் பெண்டுபிள்ளைகள் முதலியோர், இயல்பு இலரேல் - நற்குணங்களில்லாதவராக இருந்தால் (அவர்), நெஞ்சம் சுடுதற்கு மூட்டிய தீ - மனத்தைச் சுடுதற்குத் தாம் மூள்வித்துக் கொண்ட தீப்போல்வர்கள் என்றவாறு.

மனைவி மக்கள் போன்றவரை விடுதற்கரியார் என்றார். அவர் இன்றியமையாதவர் என்று கொள்ளப்பட்டவராகையால் அவர் பிழைகள்செய்யின் அவற்றைப் பொறுத்துக்கொள்வதல்லாமல் அவர் தள்ளத்தக்கவராகார் என்பது கருத்து.

எப்பொழுதும் துறையை அடுத்துக்கிடத்தற்குரிமையுடைய நாவாய்கள் அலைகள் கொண்டுவந்திட்ட முத்துக்களை அங்கே

கிடக்கவொட்டாமல் தம் போக்குவரவின்வேகத்தால் அக் கரைப் பகுதியைக் கரைத்தழிக்கின்ற கடற்றுறையையுடைய அரசனே! என அரசனை எதிர்முகமாக்கி, உன்கடற்கரைக்கண் நிகழ்கின்ற இச்செய்தியை நீ அறிவையன்றே! தன்னால் விடமுடியாத நாவாய் கள் முத்துக்களையுடைய தன்னை அழிப்பினும் அவற்றை விடமுடி யாத நிலையில் கரையிருப்பதுபோல விடுதற்கரியார் இயல்பிலராய் நெஞ்சு சுடுதற்கு எழுந்த தீப்போலிருப்பினும் நாம் பொறுமை கொள்வதன்றி அவர் தள்ளத்தக்கவரல்லர் என உள்ளுறை தோன்றுதல் காண்க.

இளவழகனுர் நாவாய், அலைகள்கொழித்த முத்துக்களைக் கரையிற் சிதறச்செய்யுந் துறை என்ற முடிபு வரப் பொருள்கூறி, 'கூடிப்பிரியலாகாமையின், ஒருவரால் ஒருவருள்ளம் புண்படுமாறு நடந்துகொள்ளலாகாது' எனக் கருத்தும் கூறினர்.

[தொடரும்.]

ஸ்ரீ:

பிழையும் திருத்தமும்

செந்தமிழ் ௨௬-ஆம் தொகுதியின் உ௫௬-ஆம் பக்கம் ௧,அ, ௧௬-ஆம் வரிகளில் 'அவர்செய்கிற தொழில்களால்' என்றிருப்ப தனை 'அவர் தம் செல்வத்தைச் செலவுசெய்கிற தொழில்களால்' என்றும், உ௭௦-ஆம் பக்கம் அ-ஆம் வரியில் 'கீழ்களுக்கு' என்றிருப்பதனைக் 'கீழ்களின் செல்வத்திற்கு' என்றும் திருத்தியும், ௨௭-ஆம் தொகுதியின் ௬-ஆம் பக்கத்துப் 'பண்டமறியார்' என்று தொடங்கும் பாட்டின்பொருளில், 'பெடைச்சேவல்வன்கழுகு பேர்த்திட்டுக்கொத்தல்' என்பதற்குக் காட்டியுள்ள பொருளை, 'தம்பெடைகளுக்குச் சேவலாகிய வலிய கழுகுகள் மறித்துக் கொடுத்துத் தாமும் தின்னுதலை' என்று மாற்றியும் அப்பாட்டின் விசேடவுரைத் தொடக்கத்தில், 'பெடைச்சேவல்' நான்கன் ருெகை'' என்பதனைச் சேர்த்தும் படித்துக்கொள்க.

சத்தியவாகீசுவரையர்.

உ

திருவெங்கையுலா

[திருவாளர். சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், திருமயிலை.]

தமிழ்நாட்டிலே துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளை அறியாதார் இல்லை. அவர் இயற்றிய நூல்களுள் திருவெங்கையுலாவும் ஒன்று. வெங்கையென்பது வெங்கனூர் என்பதன் மரூஉமொழி. அதன் பெருமைதோன்றத் திரு என்னும் அடைமொழி புணர்த்து வழங்கப்பட்டது. இது, நடுநாட்டிலே வாலிகண்டபுரத்துக்கு வடமேற்றிசையிலுள்ளது. இத்தலத்து இறைவன் திருநாமம் பழமலைநாதர் என்பது. தேவிதிருநாமம் பெரியநாயகியம்மை யென்பது.

இவ்வெங்கைநகரத்துப் பழமலைநாதர்கோயிற்றிருப்பணி, குறுநிலமன்னரும் அறிவாலும் திருவாலும் ஆற்றலாலும் வண்மையினாலும் பெரியாருமான இலிங்காசெட்டியாராலும் அவர்மைந்தர் அண்ணாமலைசெட்டியாராலும் பல்லாற்றானும் சிறப்புற இயற்றப்பட்டது. வெங்கைத்தலத்திறைவன் பவனிச்சிறப்பை விரிக்கும் இவ்வுலா தமிழிலுள்ள பிரபந்தவகையில் ஒன்றாகும்.

இவ் வெங்கையுலா சேரமான்பெருமாள்நாயனார் திருக்கயிலாயபதிமீது பாடியருளிய ஞானவுலாவுக்கு அடுத்தநிலையில் உள்ளதாகக் கருதற்பாலது. ஏகாம்பரநாதர்மீது இரட்டைப்புலவர்கள் இயற்றிய உலாவோடு ஒப்பிடத்தக்கது.

கலம்பகத்துள் அம்மானையும் பிள்ளைத்தமிழில் அம்புலிப்பருவமும் அவற்றை இயற்றிய கவியின் திறமையைக் காட்டுதல்போல உலாவில் பெதும்பைப்பருவம் அதை இயற்றிய கவியின் ஆற்றலைப் புலப்படுத்திநிற்கும். இவ்வுலாவில் உள்ள பெதும்பைப் பருவக்கண்ணிகள் மிகமிக வியக்கத்தக்கவை. இவ்வுலாவின் பெருமை புலப்படச் சிலபலகண்ணிகள் எடுத்துக்காட்டப்படும்.

இதனையியற்றிய சுவாமிகள், தம்மை ஆதரித்த சிவபத்தரும் வள்ளலுமாகிய அண்ணாமலைசெட்டியாரை வெங்கைக்கோவையிற் பாராட்டியதுபோல இவ்வுலாவிலும்,

"பண்டை யறத்தின் படிவம்இது வென்னவுருக்
கொண்ட இலிங்கையன் தலைமைந்தன் ... ...
... ...

இலையென்றல் கேட்பவுமின் ளுதென் றிரப்போர்
நிலைகண்டாங் கெப்பொருளும் நேர்வோன் ...
... ...
வந்துதன்சீர் பாடுநரை மண்மீதில் அந்நிலையே
இந்திரன்று ளுக்கும் இயல்பினன்
... ... மண்டலிகர்
நல்லகோல் இன்று நவைக்கோ லெனச்செயுங்கோல்
வல்லகோல் அண்ணு மலைவள்ளல்'' (கண்ணி—45—65)

என்று பாராட்டிப்பேசியிருப்பது உற்றுநோக்கி உவக்கற்பாலது.

மணிமுத்தாநதியை வருணிக்குமிடத்து ஆற்றுநீரோட்டத்தைப்போன்ற நடையிற் சொற்களையமைத்துப் பாடியிருக்கும் அழகு மெச்சத்தக்கது.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்-சொல்லிய வண்ணம் செயல்' என்னும் திருக்குறளை 411-ஆம் கண்ணியில் அமைத்த நயம் நோக்கற்பாலது.

திருவள்ளுவருடைய சொற்றிறத்தை 'வற்புறுத்த ஓர் பொருளை வள்ளுவனுர் பத்துமுறை சொற்பொருத்தியோதும் துணிவுபோல்' என்று 172-ஆம் கண்ணியிற் போற்றியிருக்கிறார்.

சிவபிரானுக்குச் சங்கரன் என்று ஒருபெயர் உண்டு. அதற்குச் சுகத்தைக்கொடுப்பவன் என்று பொருள். அவர் சங்காரக்கடவுளாதலின் அவர்க்குச் சங்கரன் என்ற பெயர் தகாதென்று பொருள்படச் 'கொல்பவர்க்குச் சங்கரன் என்னும்பேர் தகாதென்பார்' (கண்ணி—128) என்று மகளிர்கூற்றில் சமத்காரமாகக் கூறியது நோக்குக.

எல்லாவற்றுக்கும் மேலாக இவருடைய சிவபத்திச்சிறப்பினை,

''திருமாலும் நான்முகனும் தேடும் பொருளைக்
கருமா மிடற்றெங் கரும்பைப்—பெருமானைத்
தெள்ளமுதைத் தெய்வ சிகாமணியைத் தன்னடியார்
உள்ளுயிரைத் தோன்று உறுதுணையைக்—கள்ளவிழும்
கொன்றைப் பவளநெடுங் குன்றைப் பழமலையை
மன்றிற் குனிக்கும்ஒரு மாமணியை'' (கண்ணி-413-415)

என்று பேசியதுகொண்டு அறியலாம்.

... ...

திருவெதிர்கொள்பாடிச் சிவன்கோயிற் கல்வெட்டுக்கள்

[திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு]

முன்னுரை.

திருவெதிர்கொள்பாடி என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற பதிகளுள் ஒன்றாகும். இது, தஞ்சாவூர்ச்ஜில்லா மாயூரம் தாலுகாவில் உள்ள குற்றாலத்துக்கு வடகிழக்கே இரண்டுமைல் தூரத்தில் இருக்கிறது; சிவநெறிக்குரவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற பெருமையும் பழமையும் வாய்ந்தது; இக்காலம் மேலைத்திருமணஞ்சேரி என்று வழங்கப்பெறுகின்றது.

இவ்வூரிலுள்ள திருக்கோயில் மேற்குநோக்கிய வாயிலையுடையது. அவ்வாயிலை மூன்றுநிலையுடன்கூடிய ஒரு கோபுரம் அழகு செய்கின்றது. இத்திருக்கோயில்—கருப்பஇல், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்னும் மூன்று பிரிவுகளையும், இரண்டு பிராகாரங் களையும் கொண்டு விளங்குகின்றது. இரண்டாம் பிராகாரம் புரப்பாரற்று அழிந்துகிடக்கின்றது. மூன்றுநிலைக்கோபுரமோ செடி கொடிகள் முளைக்கப்பெற்று இன்னும் சில ஆண்டுகளில் இடிந்து விழக்கூடியநிலையில் இருக்கின்றது.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிபடுவதற்கு யான் 15—11—49உ காலை எட்டரைமணிக்குச் சென்றிருந்தேன். அத்திருக்கோயிலின் நிலையைக்கண்டு என் உள்ளம் உருகிற்று. என்செய்யலாம்! அவ்வூரில் என்னையறிந்த அன்பர் ஒருவர் இருப்பின் அவரிடம் ஏணி, அரிவாள் முதலிய கருவிகளைப் பெற்றுக் கைத்தொண்டுசெய்யலாம் என்று எண்ணினேன். அந் நிலையில் அவ்வூர் வடக்குவீதியிலுள்ள திரு. கிருஷ்ணையங்கார் மகனார் பார்த்தசாரதி என்பார் என்வருகையையுணர்ந்து கோயிலுக்குவந்து இன்முகங்காட்டி அளவளாவினார். அவரிடம் என் கருத்தைப் புலப்படுத்தினேன். அவர் எனக்குவேண்டும் கருவிகளைக் கொடுத்துதவியதோடு, என்னுடன் தொண்டும் ஆற்றினார். எங்கள் இருவர்க்கும் கைகளில் சிறிய காயங்களும் ஏற்பட்டன. யான் களைப்புற்றநேரங்களில் இளநீர், மோர் இவைகளைப் பார்த்தசாரதி கொடுத்துதவினர். கோயிற்பொறுப்பாளரால் நியமிக்கப்

பெற்றிருந்த கோயில்தொண்டரும் எங்கள் தொண்டு முடிவு பெறும்வரை கோயிலே உச்சியம்போதுக்குப்பிறகு திருக்காப்பிடாதும், தாமும் உண்ணுதும் இருந்து உதவினர்.

கைத்தொண்டு முடிவுபெற்றதும் கல்வெட்டுக்களைப் படித்து எழுதினேன். அவ்விருவர்களும் கல்வெட்டுக்களின்மேல் தேய்த்துப் படிப்பதற்கு ஊமத்தையிலே கோவையிலே இவைகளைக் கொணர்ந்து உதவினர். அவ்விருவரும் செய்த உதவி என்னல் என்றென்றும் மறக்கமுடியாததாகும். கல்வெட்டுக்கள் அனைத்தையும் அன்று மாலை நாலரைமணிவரை எழுதிமுடித்தேன்.

அக்கல்வெட்டுக்களின் மூலங்கள் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் இதுகாறும் வெளிவந்தில. அக்கல்வெட்டுக்களிற் கண்ட செய்திகளையும் அவைகளின் மூலங்கள் சிலவற்றையும் ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமென்று வெளியிடலானேன்.

கல்வெட்டுக்கள்.

இத்திருக்கோயிலில் திரிபுவனசக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவர்காலத்துக் கல்வெட்டு ஒன்றும், திரிபுவனசக்ரவர்த்திகள் இராஜராஜதேவர்காலத்துக் கல்வெட்டு ஒன்றும், கோச்சடையபன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியதேவர் காலத்துக் கல்வெட்டுக்கள் இரண்டும், ஏனைய மூன்றுகல்வெட்டுக்களும் ஆக *ஏழுகல்வெட்டுக்கள் இருக்கின்றன.

கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்திகள்

இதுபொழுதுள்ள கற்கோயில் திரிபுவனசக்ரவர்த்திகள் குலோத்துங்கசோழதேவர்காலத்திலோ அல்லது அவருக்குச் சிறிது முன்னரோ கட்டப்பெற்றது என்று தெரிகின்றது. அதைச் செய்தவன் கீரனூர்கிழவன் அரசுக்குடியான் திருநீலகண்டன் சேரமான்தோழன் ஆவன். இச்செய்தி,

(வரி.)

1 "ஸ்வஸ்திஶ்ரீ திரிபுவனசக்ரவர்த்திகள் ஶ்ரீலோத்துங்க சோழதேவர்க்கு

2 யாண்டு ரு-வது விருதராஜபயங்கரவளநாட்டு குறுக்கை நாட்டு உடை

---

* இவ் ஏழுகல்வெட்டுக்களுள் ஐந்துகல்வெட்டுக்களே இங்கே குறிக்கப் பட்டுள்ளன. பத்திராதிபர்.

3 யார் திருவெதிர்கொள்பாடிஉடையார் தேவதானத்துக் காணியுடைய இன்னுயனுர்

4 கோவில் இத்திருக்கற்றளிசெய்த கீரனூர்கிழவன் அரசுக் குடியார் திரு நீ

5 லகண்டர் சேரமான் தோழன் இராவைச் சந்திக்குவைத்த சந்தி விளக்கு ஒன்று.

6 ஒன்றும் சந்திராதித்தவரை உபையஞ்செலுத்தக் கட வோம். இச் சிவப்பிராமணரோம்."

என்னும் கல்வெட்டால் புலப்படுகின்றது. இக்கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் தென்புறச்சுவரில் இருக்கின்றது.

இக்கோயிலில் உள்ள திருப்பள்ளியறை நாச்சியாரை எழுந்தருளு வித்தவர் கண்ணமங்கலமுடையாரான வீமப்பிள்ளையின் பாரியா ரும் மிழலைநாட்டுக்கோனுரான புலியூருடையார் ஆதித்ததேவரின் மகளாரும் ஆவர். இவ்வம்மையாரின் திருப்பெயர் கல்வெட்டிற் சிதைந்துபோய்விட்டது. மேலும் இவ்வம்மையார் திருஎதிர்கொள் பாடியில் கீழைத்திருவீதியில் பூண்டிஉடையார் புகலிவேந்தர் இருந்த ஆலாலசுந்தரன்குகையை எடுத்துக்கட்டி வேய்ந்தும் உள்ளார். எனவே இவ்வூரில் சுந்தரமூர்த்திநாயனுர்க்குத் திருமடம் இருந்தசெய்தி பெறப்படுகின்றது. இவைகளை,

(வரி.)

1 "ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச்சக்கரவர்த்திகள் இராஜராஜ தேவர்க்குயாண்டு ஆறுவதின் எதிராமாண்டு கண்ணமங் கலமுடையார் வீமப்பிள்ளை பாரி, புலியூருடையான் ஆதித்ததேவர், மிழலைநாட்டுக்கோனுர்மகளார் ... ... யார் திருவெதிர்கொள்பாடி உடையார்க்கு திருப்பள்ளி யறை நாச்சியாரை எழுந்தருளுவிக்கவேணுமென்று இவர் சொல்லி இக்கோயில் தானத்தாரையும் உதையங்குடி யார்களையும் அழைத்து எனக ... ...

2 த் திருப்பள்ளியறைநாச்சியாரை எழுந்தருளுவிக்கவேணு மென்று வேண்டிக்கொண்டு நான் பல இடங்களிலும் எதிர்ப்பைகுடுத்து பொருள்கள் இவரை எழுந்தருளுவிக்க

உடலாகவும் எழுந்தருளுவிக்க வேண்டுவதுக்கும் நாச்சியார்க்கு திருவமுது ... ... இந்நாயனுர் தேவதானம் உதையங்குடியில் நான் சீதனம்பெற்று உடையேனுய் என்னுடையதாய் நான் அனுபவித்துவருகிற நிலத்து குடுத்த இருகரையன் என்று பேர்கூறப்பட்ட நிலம் காலேசின்னமும் எனக்கு

3 கதிர்கொள்பாடியில் கீழைத்திருவீதியில் பூண்டிஉடையார் புகலிவேந்தர் இருக்கிற ஆலாலசுந்தரான்குகை எடுத்துக்கட்டி மேய்ந்து சந்திராதித்தவரை செல்லவும் இக்குகைக்கு உப்புக்கும், சாதத்துக்கும், விளக்கெண்ணெக்கும், இக்குகை தெர்க்கு ... ... கும் உதையன்குடியில் நான் சீதனம்பெற்று அநுபவித்துவருகிற தான்றிப்பள்ளமென்று பேர்கூறப்பட்ட நிலம் எழுமாச்சின்னமும் தெங்கு உள்ளிட்ட மரங்களும் குகைக்கு உடலாகவும் புகலிவேந்த ... ...

4 தாமே நோக்கவும். இவர்க்குப்பின்பு இத்தன்மம் நோக்கவல்லாரைக்கொண்டு நோக்கவும் வடஉதையன்குடியில் எட்டுமாவின் கீழ்க்கடைய் என்காணியான நிலம் ஒருமாவரையும் உதையன்குடியார் அகரத்துஇருக்கும் பிராமணரில் தில்லைமூவாயிரநம்பிமகன் திருமணஞ்சேரி உடையான் பட்டர்க்கு பெரும்பற்றப்புலியூர் நாலு திருநாளுங்கும்பிட இந்நிலங் குடுத்தனென்றும் உதையன்குடியார் திருச்சிற்றம்பலமுடையார் சோழவேளாளர்க்கு நடுவில் தெருவில் கீழ்சிறகில் என்மனைக்குழி முப்பத்தைஞ்சும் இம்மனையில்,

5 தெங்கும் இவர் எனக்கு வேண்டுவன செய்கையாலே குடுத்தேனென்றும், இவ்வூர் கிழைத்தெருவில் கீழ்சிறகில் கொல்லன்பாழில் மனைக்குழி முப்பத்துசின்னமும் இம்மனைக்குழியில் நின்ற தெங்குகளும் உதையன்குடியார் அரங்கப்பிள்ளைக்குக் குடுத்தேனென்றும் இப்படி இக்கூற்றத்தைக் குமைத்தார் சொன்னமைக்கு உதையன்குடியான் திருச்சிற்றம்பலமுடையான் சோமவேளான் எழுத்தென்றும்

6 இப்படி அறிவேன் பரந்தவன் சோழவேளான் எழுத்தென்றும் இப்படி அறிவேன் வெள்ளான் திருவரங்கமுடையான் எழுத்தென்றும், செம்பங்குடையான் வேதனாகைம ... ... ட்ட கங்கனானமைக்கு ஆலத்துடையான் எழுத்தென்றும் இப்படி இவர் அருளிச்செய்யக்கேட்டேன் இவ்வூர்தட்டான் க ... ... உடைய ஆன உரியான் அற்புதக்கூத்தப்பெருந்தட்டான் என்றும், இது மணவாளகிழவன் பரந்தாங்கினான் எழுத்தென்றும், இது கொட்டையூரில் காணி உடைய கோடிநாயகன் எழுத்தென்றும் இப்படிக்கு இவை பூண்டி உடையான் எழுத்து”

என்னும் கல்வெட்டால் அறியலாம். இக்கல்வெட்டு மகாமண்டபம் அர்த்தமண்டபம் இவைகளின் தென்புறச்சுவர்களில் இருக்கிறது.

இக்கோயிலில் உள்ள திருக்காமக்கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவியாரின் திருப்பெயர் பெருங்கருணைப்பிராட்டியார் என்பதாகும். இச்செய்தியை,

(வரி.)

1 “ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மறான திரிபுவனச்சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியதேவர்க்கு யாண்டு ௰௧வது (பதினொன்றாவது) இந்நாயனார் தேவ ... ...

2 ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற அத்தத்துநாள் இக்கோயில் திருக்காமக்கோட்டமுடைய பெருங்கருணைப்பிராட்டியார் கோ

3 டையார் கோப்பெருசிங்கர்க்கு ௰க-வதும் ௰உ-ஆவதும், ௰௩வதும் முன்னின்று கடமை இறாதே ஓடிப்போதினில் இவர்

4 க்கு இவர் நின்ற இடத்தெகைகொண்டு காட்டிக்குடுக்கையில் இவரையும் இவர் போகுடைமைக்கு கோமற்றமாயவனத்து

5 இது என்று ... ... இசைவுதீட்டுதந்து புணையிலும் விடுவித்துக்கொண்டு மு ... ... ”

என்னும் கல்வெட்டு அறிவிக்கின்றது. இக்கல்வெட்டு அர்த்த மண்டபத்தின் வடபுறச்சுவரில் இருக்கின்றது. இது சிதைந்த தொரு கல்வெட்டாகும். இதிலுள்ள அம்மன்பெயரை அறிந்து கொள்ள யானும் பார்த்தசாரதியும் பட்ட அல்லல் மிகுதியாகும்.

இக்கோயிலின் முன்னுள்ள மூன்றுநிலைக்கோபுரத்தைக்கட்டிய வர் தொண்டைமண்டலத்துக் குன்றத்தூர் நாராயணமுதலியார் மகனார் வயிரவமுதலியாராவர். இச்செய்தியை,

(வரி)

1 "தொண்டை மண்டலம்
2 குன்றத்தூர் நாரணமுதலியார்புத்திரன் வயிர
3 முதலியார் திருக்கோ
4 புரம்"

என்னும் கல்வெட்டு உணர்த்தும். (இது கோபுரவாசலின் தென் பக்கத்திற் பொறிக்கப்பெற்றுள்ளது.)

இக்கோயிலுக்கு எதிரில் உள்ள திருக்குளத்தின் கீழ்கரை யில் நாட்டப்பட்டிருக்கும் ஒரு சூலக்கல்லிற் காணப்பெறும்,

(வரி)

1 "ஸ்வஸ்திஸ்ரீ இராஜராஜந்
2 திருமங்கலத்து
3 உடையார் விக்கிரம
4 சோளீஸ்வரமுடைய
5 ரர் திருநாமத்துக்காணி"

என்னும் கல்வெட்டினால் இத்திருக்குளம் இராஜராஜன் திரு மங்கலத்து விக்கிரமசோழீச்சுரமுடையார்க்கு உரிமையுடையது என்று பெறப்படுகின்றது. இந்த எதிர்கொள்பாடிக்கு வடக்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் திருமங்கலம் என்று ஓர் ஊர் இருக் கின்றது. அவ்வூர்ச் சிவன்கோயிற் கல்வெட்டுக்கள் அது இராஜ ராஜன் திருமங்கலம் என்றும், அச்சிவபெருமானின் திருப்பெயர் விக்கிரசோழீச்சுரமுடையார் என்றும் அறிவிக்கின்றன. எனவே எதிர்கொள்பாடியில் உள்ள திருக்குளம் இத்திருமங்கலத்துச் சிவ பெருமானுக்கு உரியது என்று அறியக்கிடக்கின்றது.

அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்.

இத்திருவெதிர்கொள்பாடி உடையார்திருக்கோயிலைக் கற்றளி செய்த கிரனூர்கிழவன் அரசுக்குடியான் திருநீலகண்டன் சேரமான்தோழன், இப்பெருமானுக்குச் சந்திவிளக்கு ஒன்றைக் குலோத்துங்கசோழதேவரின் மூன்றும் ஆட்சியாண்டில் வைத்துள்ளான். இக்கோயிலிற் பள்ளியறைநாச்சியாரை எருந்தருளுவித்த கண்ணமங்கலம் வீமப்பிள்ளையின்மனைவியார் உதையங்குடியில் தாம் சீதனமாகப்பெற்று அநுபவித்துவந்ததும் இருகரையன் என்று பேர் கூறப்பெற்றதுமான நிலத்தில் காலேசின்னத்தைப் பள்ளியறை நாச்சியார்க்குத் திருவமுதுக்காகக் கொடுத்துள்ளனர்.

இக்கோயில் மாடாபத்யமாய் அநுஸங்காத்த பூண்டிஉடையான் விசுவேசுரன் திருவேள்விக்குடி மணவாளநம்பி தேவதானம் திருவேள்விக்குடி நல்லூரில் கிழைக்குழலி, சிங்க விளாகம் என்னும் பெயர்கள் வாய்ந்த நிலங்களில் மூன்றேமுக்காலே நாலுமா அரைக்காணிநிலத்தை வாங்கி இந்நாயனுர்க்குத் திருநாமத்துக்காணியாகக்கொடுத்துள்ளான். இது நிகழ்ந்தது சுந்தரபாண்டியதேவர்க்கு யாண்டுபதினொன்றுவது இடபநாயிற்று அபரபட்சத்து ஞாயிற்றுக்கிழமையும் சதுர்த்திதியும் பெற்றரோகிணிநாளாகும்.

இத் திருவேதிர்கோள்பாடிக் கோயிலுக்கு அளிக்கப்பட்டனவாகத் திருவேள்விக்குடிக் கல்வெட்டினுல் அறியப்படும் நிவந்தங்கள்

இராசேந்திரசிங்கவளநாட்டுக் குறுக்கைநாட்டு இடையாற்று வெள்ளான் வெண்காடன் சாத்தனும், மந்திமன்றனும், குப்பை கூத்தனும், அவனிமாதேவடிகளும், மணஞ்சேரி அழகனும், மணஞ்சேரி சோலேகேசனும் ஆகிய இவர்கள் இடையாற்று மணம்பு என்று பேர்கூறப்பட்ட நிலத்தில் நான்குமாமுக்காணிநிலத்தை இறையிலியாகக்கொடுத்துள்ளனர்.

இராசேந்திரசிங்கவளநாட்டு நல்லாற்றூர்நாட்டு ஆலங்குடியில் முடப்பந்தூறு என்று பேர் கூறப்பட்ட நிலத்தில் வடக்கில் ஒன்றே இரண்டுமாவில் கீழ்க்கடைநிலம் ஆறுமா ஸ்ரீபலிபுறமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலத்தின் நான்கெல்லையாவது:—கீழ்பாற்கெல்லை மூலங்குடிக் கண்ணாற்றுக்கு மேற்கும், தென்பாற்கெல்லை ஆலங்குடிநிலத்துக்கு வடக்கும், மேல்பாற்கெல்லை....நிலத்துக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை குறுக்கைநாட்டுப் பிரமதேயம்

முருகுவேள்மங்கலத்துக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கு எல்லையுள் அகப்பட்டதாகும்.

இராசேந்திரசிங்கவளநாட்டுக் குறுக்கைநாட்டுச் சோத்தமங்கலத்தில் ஏழுமாநிலம் இத்திருவெதிர்கொள்பாடி உடையார்க்குத் திருநந்தவனப்புறமாகப் பாண்டூர்க்கிழவன் குணதீரன் என்னும் வாணதேவன் முதலானோரால் கொடுக்கப்பட்டுள்ளது. உய்யக்கொண்டார்வளநாட்டுப் பேராவூர்நாட்டுக் கூடலூரில் முதல் இராசராசசோழனின் இருபத்தேழாம் ஆண்டில் அவ்வூர்க்கிழவன் மாறன்செட்டியாலும் நிலங்கள் விடப்பட்டிருந்தன.

கங்கைகொண்டசோழனின் (இராசேந்திரசோழன் 1) இரண்டாம் ஆண்டில் முதல் இராசராசசோழனின் தேவியார் அருமொழியாரால் ஐம்பது பசுக்கள் விடப்பட்டன. அவற்றுள் அம்மன்னனது ஐந்தாம்ஆண்டில் இருபத்தாறு பசுக்களே எஞ்சியிருந்தன.

சரித்திரப்பகுதிகள்.

திருவெதிர்கொள்பாடிக்கு உரியனவாய்த் திருவேள்விக்குடிக் கல்வெட்டிற் குறிக்கப்பெற்றுள்ள நிபந்தங்களில் பெரும்பாலன முதல் இராசராசசோழனின் இருபது, இருபத்துநான்கு, இருபத்தேழாம் ஆண்டுகளில் விடப்பெற்றனவாகும். ஆனால் அவைகள் கங்கைகொண்டசோழனின் (முதல் இராசேந்திரசோழதேவனின்) ஆறும் ஆண்டில் கல்லிற் பொறிக்கப்பெற்றுள்ளன. இங்ஙனம் ஒரு அரசர்காலத்தில் விடப்பட்ட நிபந்தங்களின் மூல ஓலை அல்லது செப்பேடுகளைப்பார்த்துப் பின்வந்த அரசர்கள் கல்லிற் செதுக்கிவைப்பது வழக்கம் என்பதைத் திருப்பனந்தாள் செஞ்சடையப்பர்கோயிற் கல்வெட்டுக்களினாலும் அறியலாம்.

"உடையார் ராஜேந்திரசோழதேவர்க்கேய் யாண்டு உ-வது உடையார் ஸ்ரீராஜராஜதேவர் தேவியார் ராஜராஜமண்டலத்துத் திரு ... ... அரங்கன் அருமொழி" என்னும் வேள்விக்குடிக்கல்வெட்டுப்பகுதியால் முதல் இராசராசசோழர்க்கு அருமொழி என்பார் தேவியார் என்பதும் அவர் பாண்டியன்மகளார் என்பதும் அறிகின்றோம். திருவெதிர்கொள்பாடி என்னும் ஊர் திருவெருதுபாடி என்று திரிந்து வழங்கிவந்துள்ளதைத் திருவெதிர்கொள்பாடிக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

மதுரகவியாழ்வார்.

14 துகளற வடித்தசொல் குறுமுனி விதித்திட்ட
தொன்மையில் வழாதமுறையிற்
சுழியொதுங் காமலிடு கொம்புகால் கடைதலை
சுருங்கா துறுப்புவாய்ப்ப
அகரமுதல் னகரஈ றுறுமெழுத் தின்புணர்ப்
பழியாது மொழிகள்தவறு
தறநெருங் காமலக லாமல்வரி யொன்றையொன்
றணுகாது சிதகுறுமற்
பகரவரு மறையினைத் தமிழ்செய்து குருகைப்
பராங்குச னுரைப்பவிரைவிற்
பட்டோலை யிட்டெழுது மதுரகவி முனிவரன்
பாதார விந்தமறவேன்
சிகரவட வரையனைய நவமணிக் கோபுரத்
தென்குறுங் கைத்திருநகர்ச்
சேவிக்க வாழ்விக்கு நம்பியைப் புகழுமென்
செந்தமிழ்க் கவிதழையவே. (கச)

குறிப்புரை:—குறுமுனி-அகத்தியர். குறுமுனி என்பதனை இடைநிலைத் தீபகமாக்கிக் குறுமுனி துகளறவடித்தசொல் குறுமுனி விதித்திட்ட தொன்மையின் வழாத முறையில் எனக்கொண்டு, அகத்தியனாற் குற்றம் நீக்கிச் செவ்விதாக்கப்பட்ட தமிழ்மொழி அவர்விதித்த மரபிற்பிறழாதமுறையில் எனப் பொருளுரைக்க. சுழி, கொம்பு, கால் என்பவை எழுத்துக்களின் உறுப்புக்கள். கடை தலை சுருங்காது என்பதனைத் தலை கடை சுருங்காது என மாற்றி முதலும் ஈறும் குறைபடாமல் என வுரைக்க. உறுப்பு வாய்ப்ப - எழுத்துக்களின் வடிவு சிறக்க. அகரம் முதல் னகரவீறுறும் எழுத்து என்பது இடைநிலைவிளக்காய் அகர முதல் னகரவீறுறுமெழுத்து, சுழியொதுங்காமல் கொம்பு கால் தலை கடை சுருங்காது உறுப்புவாய்ப்ப எனவும், அகரமுத னகர வீறுறும் எழுத்தின்புணர்ப்பழியாது எனவும் கொள்ளநின்றது. அகர முதல் னகரு ஈறு உறும் எழுத்தின் புணர்ப்பு அழியாது - உயிரீறும் மெய்யீறுமாகிய சொற்களின்பின் உயிர்முதலும் மெய்ம்முதலும் ஆகிய சொற்கள் வந்து புணரும் புணர்ச்சியிலக்கணம் பிழைபடாமல். மொழிகள் தவறாது - சொற்பிழைபடாமல். மொழிகள் என்பதைப் பின்னுங்கூட்டி, மொழிகள்

அறநெருங்காமல் அறஅகலாமல் எனக் கொள்க. அற-மிகவும். வரி ஒன்றை யொன்று அணுகாது (வரி) சிதகுறாமல் என்க. சிதகு - குற்றம். குருகை - ஆழ்வார்திருநகரி. பராங்குசன்-நம்மாழ்வார். பகர அரும் மறை-சொல்லுதற் கரிய வடமொழிவேதத்தை. பகர வரும் மறை எனப் பிரித்து (எழுதாக்கிளவி யாய் ஆசாரியன் முன்) ஓத (ச் சீடன்) அடுத்து ஓதுதலால் பரம்பரையாகக் கேள்விமுறையால்வருகின்ற மறையை எனலுமாம். தமிழ்செய்து-தமிழாக்கி; இனியதாக்கி எனினும் ஆம். பட்டோலையிட்டு - ஓலையை (வாரி ஏடாக) அமைத்து மஞ்சட்காப்பிட்டு. மதுரகவியாகிய முனிவரன் என்க. மதுர கவி - ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவர்; சடகோபருடைய சீடர். வட வரை - மகாமேரு. இச்செய்யுளின் முன் மூன்றடிகள், சடகோபர் அருளிச் செய்த தமிழ்மறையை மதுரகவியாழ்வார், ஏட்டில் எழுதியருளப்பண்ணிய செய்திகூறுமுகத்தால் ஏடெழுதுவோரும் படியெழுதுவோரும் குறிக்கொள்ள வேண்டிய பலசெய்திகளை விளக்குகின்றன. குருகைநம்பியைப் புகழும் என் கவி தழையும்பொருட்டு மதுரகவிமுனிவரன்பாதாரவிந்தம் மற(வாது நினை) வேன் என முடிவுகொள்க. குருகைப்பராங்குசன் மறையைத் தமிழ் செய்து உரைப்ப, குறுமுனி வடித்தசொல் குறுமுனிவிதித்திட்ட தொன்மை யின் வழாதமுறையில் எழுத்தின் உறுப்புவாய்ப்ப, எழுத்தின்புணர்ப்பு அழியாது, மொழிகள் தவறாது, (மொழிகள்) அறநெருங்காமல், (அற) அகலாமல், வரி ஒன்றையொன்றணுகாது சிதகுறாமல் பட்டோலையிட்டு விரைவின் எழுதும் மதுரகவி முனிவரன் என்க. (14)

எதிராசர்

15 தமராமுறு கடலுல கிருட்டற விமைக்குமொரு
தமனியச் சுடர்விளக்கைச்
சாருவா கச்சமண சர்ப்பகரு டேசனைச்
சட்சமய பதகபடலத்

திமிரதின கரனைமா யாவாத குஞ்சரத்
திண்டிறல் தொலைத்தகொற்றச்
சிங்கவேற் றைச்சைவ சித்தாந்த கொடுமுடிச்
சிகரவச் சிராயுதத்தை

அமரர்பெற வரியதிரு மந்திரப் பொருளளித்
தாளுமெம் பெருமானைநீ
டந்தணர் குலக்கொழுந் தெந்தையெதி ராசனை
அடித்துணை வழுத்துவனியான்

நிமிரவொரு தாளெடுத் தண்டபகி ரண்டமும்
நிரம்பிடும் படிவளர்ந்து
நீண்டபொன் மேனிநம் பியையும்பர் தலைவனை
நிகழ்த்துமென் கவிதழையபவே. (கரு)

குறிப்புரை:—தமரம் உறு கடல் உலகு-ஒலியுடைய கடலாற் சூழப்பட்ட உலகில். இமைக்கும் விளங்குகின்ற. தமனியவிளக்கு, சுடர்விளக்கு என்க. தமனியம்-பொன்; சுடர்-ஒளி. சாருவாகச் சமண சர்ப்ப கருடேசன்-சாருவாகரும் சமணரும் ஆகிய பாம்புகளுக்குக் கருடனாக விளங்குபவன். சட்சமய பதக படலத் திமிர தினகரன் - அறுவகைச்சமயவாதிகளாகிய தீயவர்களின் ஆணவமாகிய இருளைப்போக்கும் சூரியனாக விளங்குபவன். மாயாவாத குஞ்சரத் திண்டிறல் தொலைத்த கொற்றச் சிங்கவேறு-மாயாவாதிகளாகிய மத யானைகளின் வலிமையைத் தொலைத்த வெற்றியையுடைய சிங்கேறு. சைவ சித்தாந்த கொடுமுடிச் சிகர வச்சிராயுதத்தை-சைவசித்தாந்தமாகிய மலையின் உச்சியைத் தகர்க்கும் வச்சிராயுதத்தை. அமரர் பெற அரிய-தேவர்களாலும் பெறுதற்கரிய. திருமந்திரப்பொருள் அளித்து-அஷ்டாக்ஷரத்தின் பொருளை எல்லாரும் தெளியத் தந்து. எதிராசன் - முனிக்கரசாகிய இராமாநுஜன். தாள் - திருவடி. விளக்கு, கருடேசன், தினகரன், சிங்கேறு, வச்சிராயுதம் என்பன உருவகவாய்பாட்டால் இராமாநுசரையுணர்த்திநின்றன. நம்பியை உம்பர்தலைவனை நிகழ்த்தும் என்கவி தழைப எதிராசனை அடித்துணைவழுத்துவன் என வினைமுடிவுகொள்க. (15)

கடவுள்வணக்கம் முற்றும்

அழகியநம்பி துணை.

க. காப்புப்பருவம்

திருமால்

16 பூமாது புணர்ந்து மோகிக்க மண்டல
பூலோக மடந்தை காமிக்க அந்தணர்
போதாதி விரிஞ்சர் பூசிக்க அன்பொடு
பூதூர் முனிவந்து சேவிக்க வுந்தகு

மாமாலை முகுந்த மூலத்தை யம்பர
வானோர் தொழுமிந்திர நீலத்தை வண்புகழ்
வாடாத குறுங்கை வாழ்வித்த நம்பியை
மாகாதல் புரிந்து காவல் புரிந்தருள்

காமாதி களென்ற பாவத்தை வென்றது
கால்வீழ் சமயங்கள் ஆறுக்கு நின்றது
காவா வுலகங்கள் ஏழிற் பொலிந்தது
கார்போ லுதவும் தயாவிற் சிறந்தது

நாமாது முணர்ந்து பேசக் கடந்தது
நால்வே தமுமொன்று சோத்தரும்பொருள்
நாடாது கிடந்த பாழிற் பெரும்பொருள்
நாராயண துங்க ஆதிப் பரஞ்சுடரே. (க)

குறிப்புரை:—இப்பாசுரத்தால் கவி திருக்குறுங்குடிநம்பியைக் காத்தருளும்படி திருமாலை வேண்டுகிறார். பூமாது - திருமகள். மண்டலபூலோக மடந்தை-பூமிதேவி. மண்டலம்-வட்டம். காமிக்க-ஆசைப்பட. போதாதி விரிஞ்சர் - அறிவும் தலைமையும் வாய்ந்த பிரமர். பூசிக்க - வழிபட. பூதூர் முனி - இராமாநுசர். பூமாது மோகிக்கவும் பூலோகமடந்தை காமிக்கவும் அந்தணரும் விரிஞ்சரும் பூசிக்கவும் பூதூர்முனிவந்து சேவிக்கவும் தகும் மாமால் என்க. முகுந்தமூலத்தை-முகுந்தனாகிய மூலப்பொருளை. அம்பர வானோர் - நித்தியசூரிகள். வண்புகழ்வாடாதகுறுங்கை - சிறந்த புகழ்மாறாத குறுங்குடி. வண்புகழ்வாடாதநம்பி குறுங்கைவாழ்வித்தநம்பி என இயைப்பினும் அமையும். மாமால், முகுந்தமூலம், இந்திரநீலம் என்பவை திருக்குறுங்குடிநம்பியைச் சுட்டிநின்றன. காமாதிகள் - காமம் வெகுளி மயக்கம் என்பன; காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்பனவும் ஆம். கால்வீழ்சமயங்கள் ஆறுக்கும் நின்றது - காலற்ற (-நிலையற்ற) புறச்சமயங்கள் ஆறினாலும் மறுக்கப்படாது நிலைத்தது. கால்வீழ் சமயங்கள் என்பதற்கு வேரூன்றிய (நிலைத்த) சமயங்கள் என்று பொருள் கொள்ளலும் ஆம். காவா - காத்தலைச்செய்து. உலகங்களேழில் - ஏழு லோகத்திலும். பொலிந்தது - விளங்கியது. ஏழிலும் என்பதனுள் உம்மை செய்யுள்விகாரத்தால் தொக்கது. ஏழுலோகத்திலும் காத்தலைப்புரிந்து கொண்டேவிளங்கியது என்றபடி. கார் - மேகம். உதவும் - கொடுக்கும். தயா - தயை. நாமாது - கலைமகள். கலைமகளும் அறிந்துபேசமுற்பட அவளறிவெல்லையுளடங்காது அப்புறப்பட்டபொருள் என்றவாறு. நாமாதும்

உம்மை சிறப்பு. நால்வேதமும் உம்மை முற்றும்மை. நான்குவேதங்களையும் ஒருங்குதந்த பரம்பொருள் என்றபடி. நான்கு வேதங்களாலும் (மாறுபாடின்றி) ஒருபடியாகக் காட்டித்தரப்பட்ட பரம்பொருளெனினும் ஆம். காடாதுகிடந்த - அறியப்படாது தங்கிய. பாழ் - மூலப்பிரகிருதி. பாழிற் றோன்றும் பெரும்பொருள் என்க. துங்கம்-உயர்வு. வென்றதும் நின்றதும் பொலிந்ததும் சிறந்ததும் கடந்ததும் தரும்பொருளும் பெரும்பொருளும் பரஞ்சுடருமான நாராயண! குறுங்கைவாழ்வித்தநம்பியை மாகாதல்புரிந்து காவல்புரிந்தருள் என முடிக்க. (16)

திருமகள்

17 பாடற் பசுங்கிள்ளை யுங்கொள்ளை யமுதமும்
பருமணியும் அயிராவதப்
பகடுமைந் தருவும் பனித்திங்க ளுந்திருப்
பாற்கடற் றிரைவயிற்றிற்
கூடப் பிறக்கும் படிக்குள்ள செல்வக்
குடிப்பிறப் பினிதானநம்
கோமளக் கொடிவல்லி தாமரைத் தவிசல்லி
கோவில்கோண் டரசிருப்பாள்
ஆடற் கரும்பன்ன செஞ்சாலி தலைகுனித்
தாள்வினைக் கடைசியர்புகுந்
தளியொடுங் களைகட் டெறிந்துயர் வரம்பிட்ட
அரவிந்த முங்குவளையும்
வாடப் புகுந்தொறு மணந்தவர் தணந்தகுல
மங்கையர் முகங்கவிழ்க்கும்
வைகுந்த வளநாட னைக்குறுங் காபுரி
மழைக்கொண்ட லைக்காக்கவே. (உ)

குறிப்புரை:—இப்பாடலால் ஆசிரியர் குறுங்குடிநம்பியைக் காத்தருளும்படி திருமகளை வேண்டுகிறார். பாடற்பசுங்கிள்ளையும்-பாராட்டிப்பேசப்படுகிற பசியநிறத்தையுடைய உச்சைசிரவம் என்னும் குதிரையும். கிள்ளை - குதிரை. கொள்ளை - மிகுதி. பருமணி - பெருமையையுடைய சிந்தாமணி. அயிராவதப் பகடு - அயிராவதமாகிய யானை. ஐந்தரு - அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பவை. பனித் திங்கள் - குளிர்ச்சியுள்ள சந்திரன்.

திரைத் திருப்பாற்கடல்வயிற்றில் என மாறிக்கூட்டுக. திரை - அலை. கோமளம் - அழகு. வல்லி தாமரை அல்லி தவிசுகொண்டு கோயில்கொண்டு அரசிருப்பாள் - கொடியாகிய தாமரையின்கண் உள்ள மலரின் அகவிதழை ஆசனமாகவும் கோயிலாகவும் கொண்டு அரசுவீற்றிருப்பவள். ஆடல்-அசை தலையுடைய. செஞ்சாலி - செந்நெல். தலைகுனித்து - தலைவளைந்து. ஆள் வினை - முயற்சி. கடைசியர் - மருதநிலமகளிர். கடைசியர் கரும்பன்ன செந்நெல்வயலில் தலைவளைத்துப்புகுந்து களையாகப்பறித்து உயர்ந்த வயல் வரப்பில் வண்டொடும் எறிந்திட்ட அரவிந்தமும் குவளையும் என்க. அளி - வண்டு. அரவிந்தம் - தாமரை. வாடப்புகுந்தொறும் - வாட்டத்தையடை யும்பொழுதெல்லாம். மணந்தவர் - கூடியநாயகர். தணந்த - பிரிந்த. அரவிந்தமும் குவளையும் முறையே நாயகரைப்பிரிந்த மகளிர் முகத்தையும் கண்ணையும் ஒத்துத்தோன்றும் காட்சிவளமுடைய வைகுந்தநாடு என்க. கொண்டல்-மேகம். வைகுந்தவளநாடனை குறுங்காபுரி மழைக்கொண்டலை அல்லித்தாமரை தவிசாகவும் கோயிலாகவும்கொண்டு அரசிருப்பாளான திருமகள் காக்க என முடிவுகொள்க. (17)

பிரமன்

18 கோதண்ட மென்றொரு பொருப்பைக் குனித்துக்
குழைத்துத் தழைக்குமுளரிக்
கோதைசூழ் மெல்விரல் தொடுத்துக் கடுங்கணை
கொடுத்துநாண் இறுகவலபாற்
காதண்ட வாங்கிக் குறித்திலங் காபுரங்
காவலன் இலக்கிலெய்த
கைவலானைத்தென் குறுங்குடி நெடுந்தகைக்
கடவுளைக் காத்தளிப்பான்
மூதண்ட திசைகண்ட புவனங்க ளும்புவன
முறைநடாத் துந்தலைவரும்
முன்னின்ற பன்னிரு பெயர்த்தொகுதி யும்முக்கண்
மூர்த்திபதி னொருகோடியும்
வேதண்ட கோடியும் கனைகடல் வளாகமும்
விரிகின்ற பல்லுயிர்களும்
விளையாடு திறனைய் வகுத்தழிய மீளவும்
விதிக்குந் தொழிற்[1]பிரமனே. (கூ)

[1] பரமனே. [பி.-ம்.]

குறிப்புரை:—கோதண்டம் என்று ஒரு பொருப்பைக் குனித்து - வில் என்று ஒரு மலையை வளைத்து. குழைத்து - குழையையுடையதாகி. தழைக்கும் - வளர்ந்திருக்கிற. 'கோதண்டம் என்ற ஒரு பொருப்பைக் குழை(வி)த்துக் குனித்து' என வுரைக்கலும் ஆம். குழைத்து - குழையும்படிசெய்து. முளரி - தாமரை. இது தாமரைபோலும் கையையுணர்த்திநின்றது. முளரி (யின்கண் உள்ள) மெல்விரல், கோதைசூழ் மெல்விரல் என்க. கோதை - வீரர்கள் முன்கையிலணியும் தோலுறை. கோதைசூழ்மெல்விரலால் நாண் இறுகக்கொடுத்துக் கடுங்கணைதொடுத்து வலபாற்காதண்டவாங்கி, குறித்து, இலங்காபுரம் காவலனாகிய இலக்கில் எய்த கைவலான் என்க. காதண்ட - காதை நெருங்கும்படி. வாங்கி - இழுத்து. குறித்து - (தான்செய்யப்போகும் வீரச்செயலைச்) சுட்டி=முன்னறிவித்து. இலங்காபுரங்காவலன்-இராவணன். இலக்கு - குறி. கைவலான் - தோள்வலியுடைய இராமன். நெடுந்தகைக் கடவுள் - அளப்பருங்குண முடையதெய்வமாகிய குறுங்குடிநம்பி. மூதண்ட திசைகண்ட புவனங்களும்-பழமையான உலககோளத்தில் திசைகள்தோறும் காணப்பட்ட உலகங்களையும். புவனம் முறைநடாத்துந் தலைவரும் - அவ்வுலகங்களிலிருந்து அரசியல்நடத்துந் தலைவர்களையும். பன்னிருபெயர்த்தொகுதி - துவாதசாதித்தியர். முக்கண்மூர்த்தி பதினொருகோடியும் - பதினொருகோடி உருத்திரரும். வேதண்டம் - மலை. கனை - ஒலிக்கின்ற. கடல்வளாகமும் - கடலாகியஇடமும். திறன் - வகை. வகுத்து - (பாகுபாட்டோடு) படைத்து. அழிய-அவ்வாறு படைக்கப்பட்ட உலகமுதலியவை அழிந்துபட. மீளவும் விதிக்கும் தொழிற் பிரமன் - மறுபடிபடைக்கும் தொழிலையுடைய பிரமன். பிரமன், குறுங்குடி நெடுந்தகைக்கடவுளைக் காத்தளிப்பான் என முற்றுவிக்க. இது குறுங்குடியிறைவனைக் காத்தளிக்குமாறு ஆசிரியர் பிரமனைவேண்டியபடி கூறிற்று. (18)

சேனைமுதலியார்

19 அத்திரிப் பெயருடைத் தவமுனிக் கைம்புல
னடக்கிய பாரத்துவாசற்
ககத்தியற் கரியசா பங்கற்கு முத்தியருள்
அகிலாண்ட முதல்வனைத்தாள்
பொத்திமுப் புவியுமீ ரடியளவை யுள்படப்
பூரணசொ ரூபநீண்ட
பொன்மேனி நம்பியைச் செம்பொற் குறுங்கா
புரேசனைக் காக்கஞற்றுப்

பத்தடுக் கியவிழிப் புத்தேளிர் தலைவனும்
பதுமபீ டப்பிரமனும்
பனிமதிக் கோடீர முனிவனுந் தொழுதிடப்
பார்த்துவை குண்டபதவிச்
சித்திரக் கனகக் கபாடவா யிலினின்று
சேவிப்ப வேத்திரத்தாற்
செய்தொழின் முயற்சியி னெருக்கற நிறுத்துமச்
சேனுபதித் தலைவனே. (௪)

குறிப்புரை:— இச்செய்யுள், திருக்குறுங்குடிநம்பியைக் காக்குமாறு சேனைமுதலியாரை ஆசிரியர் பிரார்த்தித்தபடி கூறுகிறது. இதன் முன் பாதியுள் இராமாவதாரவைபவத்துள் ஒருபகுதியும் வாமனுவதாரமூர்த்தி உலகளந்தவைபவமும் கொண்டு குறுங்குடிநம்பிபெருமை பேசப்படுகிறது. ஐம்புலன் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பவை. அகிலாண்டமுதல்வன் - எல்லா உலகங்களுக்கும் தலைவன். தாள் - அடியால். பொத்தி - மறைத்து. முப்புவியும் - மூன்றுலோகங்களும். ஈரடியளவையுள்பட - இரண்டடியளவுள் அடங்கும்படி. பூரணசொரூபம்-முழுவடிவமாக. நீண்ட- வளர்ந்த. பொன்மேனிநம்பியை - அழகிய திருமேனியையுடைய நம்பியென்னும் திருநாமமுடைய இறைவனை. பொன் - அழகு. பொன்னை மேனியின்கட் கொண்ட நம்பி எனினும் ஆம். இங்கே பொன் - திருமகள். மேனியென்பது மார்பைக்குறிக்கும். அடுக்கிய நூற்றுப்பத்து விழிப் புத்தேளிர்தலைவன் - வரிசைப்பட்ட ஆயிரம் கண்களையுடைய தேவர்தலைவனுன இந்திரன். நூற்றுப்பத்து - ஆயிரம். விழி - கண். புத்தேளிர் - தேவர். பதுமபீடப் பிரமனும்—தாமரைமலரை ஆசனமாகக்கொண்ட பிரமனும். பதுமம் - தாமரை. பீடம் - ஆசனம். பனிமதிக் கோடீர முனிவனும் - குளிர்ந்த சந்திரனைச் சடையின்கட்சூடிய முனிவனுகிய சிவபெருமானும். பனி - குளிர்ச்சி. மதி-சந்திரன். கோடீரம்-சடை. தொழுதிட-தன்னை வணங்க. வைகுண்டபதவிச் சித்திரக்கனகக் கபாடவாயிலில் நின்று - வைகுண்டமாகிய முத்தித் தலத்துப் பலவண்ணங்கள் ஊட்டப்பட்ட பொற்கதவுகளையுடைய வாசலில் நின்று. சேவிப்ப - இந்திரன் முதலிய தேவர் திருமாலை வணங்கும்படி. வேத்திரத்தாற் செய்தொழின் முயற்சியின் - பிரம்பினுற் குறித்துக்காட்டிச் செய்யும் பணியாகிய முயற்சியினுல். நெருக்கு அற - கூட்டம் நீங்க. தலைவனும் பிரமனும் முனிவனும் தொழுதிடப்பார்த்து வாயிலில் நின்று வேத்திரத் தாற் செய் தொழின்முயற்சியினுல் நெருக்கற நிறுத்தும் சேனுபதி என்க.

அ பண்டறிசுட்டு. சேனுபதித்தலைவன் - சேனைமுதலியாகிய தலைவன். சேனுபதித்தலைவன், முதல்வனை நம்பியை, குறுங்காபுரேசனைக் காக்க என முடிவுகொள்க. (19)

பெரியதிருவடி

20 வீசிய புகழ்க்குலக் கற்பினுக் கரசியார்
விநதையார் காதலிப்ப
வேதாந்த சிற்பர முகுந்தமூ லக்கடவுள்
வீற்றிருக் குந்தவிசுமாய்க்
காசிப முனித்தலைவர் செய்தவத் தாலமுத
கலசத்தி னுற்பவித்துக்
கடுவிடப் பாந்தட் பழம்பகை செகுத்துவரு
கருடேசன் நின்றுகாக்க
வாசமக ரந்தவரி வண்டுழுத தண்டுழாய்
மாலிகை வனைந்தமவுலி
மாரகதக் குன்றையருள் கருணைப் பெருங்கடலை
வண்ணமழ கியநம்பியைக்
கோசிக விதானமணி மண்டபமு நெடுவரைக்
கோபுரப் புரிசையுஞ்சூழ்
கொண்டலைத் தைவருந் தண்டலைப் பழனக்
குறுங்கா புரிப்பொருளையே. (உ)

குறிப்புரை:—இதனல் கவி, திருக்குறுங்குடிநம்பியைக் காக்குமாறு பெரியதிருவடியாகிய கருடனை வேண்டுகிருர். வீசிய புகழ்க் குலக் கற்பினுக் கரசியார் விநதையார் காதலிப்ப - பரவிய புகழையுடைய சிறந்த கற்புக்கரசியாகிய விநதை ஆசைப்பட. ஆர்விகுதி உயர்வுகுறித்தது. விநதை-கருடன் தாய். விநதை காதலிப்பப் பழம்பகை செகுத்துவரு கருடேசன் என இயைக்க. வேதாந்த சிற்பர முகுந்த மூலக் கடவுள்-வேதாந்தத்தாற் பேசப் படும் ஞானமயமான மேலான முகுந்தனென்னும் பெயருடைய உலககாரணனுகிய கடவுள். வீற்றிருக்கும் - சிறப்போடு தங்குகின்ற. தவிசு - ஆதனம். உற்பவித்து - தோன்றி. கடுவிடப் பாந்தட் பழம் பகை - கொடிய நஞ்சுடைய பாம்பாகிய பழைய பகையை. பாந்தள் - பாம்பு. செகுத்து - அழித்து. வரிவண்டு உழுத வாச மகரந்தத் தண்டுழாய்

மாலிகை - இற்றுக்களையுடைய வண்டு இண்டிய பரிமளத்தொடுகூடிய மகரந்தத்தையுடைய குளிர்ந்த துழாய்மாலையை. வனைந்த-சூடிக்கொண்ட, மவுலி-கிரீடத்தையுடைய. கோசிகம் - பட்டு. விதானம் - மேற்கட்டி. நெடுவரைக் கோபுரப்புரிசை - நீண்ட மலைபோலும் கோபுரங்களையுடைய கோட்டை மதில். கொண்டல் - மேகம். தைவரும் - தடவுகிற. தண்டலை - சோலை. பழனம் - மருதநிலம். குறுங்காபுரிப்பொருளைக் கருடேசன் காக்க என வினைமுடிவுகொள்க. (20)

சிறியதிருவடி

21 அருவரை மயேந்திரக் குடுமிநின் றெறிகடற்
கப்புறங் குப்புறச்சென்
றருந்ததிக் கற்புடை மகட்காழி நல்கிமீண்
டரசிளங் குமரனைத்தான்

பொருதெதிர்த் துப்பிடித் தவனியி லரைத்தரண்
பொன்னகர மெரிகொளுத்திப்
புயவலித் துணைபடப் பலதலைச் சிகரப்
பொருப்பிடி படப்புடைத்து

வரிசிலைக் குரிசில்சுக் கிரிவனங் கதன்முதல்
வானரத் தலைவருக்காய்
வடவரைக் கப்பால் மருத்துமலை கொடுவந்த
மாருதிக் கடவுள்காக்க

குருகுலத் தரசரைப் பரிபவப் படவுயிர்க்
கொலைபடச் செறுதடக்கைக்
கோமளச் சாமளத் திருநிறத் தவனைக்
குறுங்கா புரிப்புயலையே. (க)

குறிப்புரை:—அருவரைமயேந்திரக்குடுமிநின்று - அடைதற்கரிய மகேந்திரமலையின் உச்சியில்நின்று. எறி - மோதுகின்ற. அருந்ததிக் கற்புடை மகள் - சீதாபிராட்டி. ஆழி - (இராமன்கை) முத்திரைமோதிரத்தை. நல்கி - கொடுத்து. மீண்டு - மேலும். அரசிளங்குமரனை - அரசனாகிய இராவணனுடைய குமாரருள் இளையவனாகிய தக்கனை. பொருது - போர் செய்து. எதிர்த்துப் பொருது என மாறுக. பிடித்து - (தக்கனைக்) கைப்பற்றி, அவனியில் அரைத்து-பூமியில் தேய்த்து. அரண் பொன் நகரம்-

அரண்களையுடைய அழகிய இலங்கையாகிய நகரத்தை. எரிகொளுத்தி - தீ மூட்டி. பலதலைச் சிகரப்பொருப்பு இடிபட வலி(ய) புயத்துணைபடப் புடைத்து-பலதலைகளாகிய சிகரங்களையுடைய இராவணனாகிய மலை இடிபடும் படி வலிய இரண்டுதோளும் அழுந்தத் தாக்கி. வரி சிலைக் குரிசில்-கட்டமைந்த வில்லையுடைய புருடசிரேட்டனாகிய இராமன். வடவரை-மகாமேரு. மருத்து மலை - மருந்துமலை=சஞ்சீவிமலை. கொடுவந்த - கொண்டுவந்த. மாருதிக் கடவுள்-அநுமனாகியதெய்வம். நின்று, சென்று, நல்கி, எதிர்த்து, பொருது, பிடித்து, அரைத்து, கொளுத்தி, புடைத்து, கொடுவந்த மாருதிக்கடவுள் என்க. குருகுலத்தரசரை, பரிபவப்பட உயிர்க்கொலைபடச் செறுதடக்கைக் கோமளச் சாமளத் திருநிறத்தவன்-குருகுல அரசர்களாகிய துரியோதனாதி யரை அவமானமடையும்படியும் (சூதுசென்றகாலத்து நிலவறையுள் அவர்படைஞரை) உயிரழியும்படியும் செற்ற பெரிய கையினையும் அழகிய சியாமளநிறத்தினையும் உடைய கண்ணன். பரிபவம் - அவமானம். செறல் - அழித்தல். கோமளம் - அழகு. சாமளம் - பசுமை. புயல் - மேகம். குறுங்காபுரிப்புயலை மாருதிக் கடவுள் காக்க என முடிக்க. இப்பாட்டு பாண்டவர்தூதனாகிய நம்பியைக் காத்தருளும்வண்ணம் இராமதூதனைவேண் டியவாறு கூறுகிறது. இதனுள், முன்பாதியில் இராமதூதனாகிய அனுமன் வீரச்செயலும் பிற்பாதியில் பாண்டவர்தூதனாகிய கண்ணன் வீரச்செயலும் புலப்படவைத்த நயம் உற்றுநோக்கி யுவக்கத்தக்கது. (21)

ஆதிசேடன்

22 நறைபிலிற் றியபொகுட் டகவிதழ்ச் செங்கமல
நாண்மலர்க் கனிபவளவாய்
நயனமா னனமணிக் கழல்துணைக் கரமான
நம்பிநாத வினோதனைக்
குறியசிற் றுருவெடுத் துலகளந் தருளுங்
குறுங்கா புரிக்கடவுளைக்
கோயில்வா யிற்புறத் தகலாது நின்றுதன்
குற்றேவல் செய்துகாக்க
இறுவரைப் பிரமகற் பமுநொடிப் பொழுதையொத்
திணைவிழித் துயில்வளர்த்தற்
கெறிதிரைப் பரவையிற் சயனமிட் டுயர்திறத்
தொருகவுட் டிருநாவுடைக்

கறையணப் பிணருடற் கடுவிடக் கனல்விழிக்
கட்செவித் துளையெயிற்றுக்
கணபணப் பஃறலைச் சிறுவரிப் பொறியுடைக்
காகோத ரத்தலைவனே. (எ)

குறிப்புரை:—நறைபிலிற்றிய-தேனைச் சிந்துகின்ற. பொகுட்டு-தாமரைக் கொட்டை. கனி பவளம் - கனிந்த (முற்றிய) பவளம். செங்கமல நாண் மலர்போலும் வாயும் கண்ணும் முகமும் திருவடியும் இணைக்கைகளும் உடைய நம்பி என்க. நாண்மலர் - அப்பொழுதலர்ந்தபூ. வாய்க்குக் கமல நாண்மலர் முன்னே உவமைகூறப்பட்டமையின், பவளவாய் என்பது பவளம் போலும் வாய் என்று பொருள்படாது வாளா பெயராய்நின்றது. நாத விநோதன் - இசையால் மகிழ்ச்சியடைபவன். இறுவரைப் பிரமகற்பமும் - உலகம் அழியும் கால எல்லையாகிய பிரமன் வாழுநாளும். துயில் - யோகநித்திரை. எறி - மோதுகின்ற. திரை - அலைகளையுடைய. பரவையில் - திருப்பாற்கடலில். சயநம் - படுக்கை. கவுள் - கன்னம். இருநா - பிளவுபட்ட நா. கறை-விடம். அண்ணம்-மேல்வாய். பிணர் உடல்-சருச்சரையான வடிவு. எயிறு - பல். சிறு வரிப் பொறியுடை - சிறிய கோடுகளையும் புள்ளியையும் உடைய. கண பணப் பஃறலை - கூட்டமான படத்தொடு கூடிய பலவாகிய தலை. பொறி - புள்ளி. காகோதரம் - பாம்பு. கவுளையும் நாவினையும் அண்ணத்தினையும் உடலினையும் விழியினையும் செவியினையும் எயிற்றினையும் தலையினையும் உடைய காகோதரத்தலைவன் என்க. காகோதரத்தலைவன் குறுங்காபுரிக் கடவுளை அகலாது நின்று குற்றேவல்செய்து காக்க என முடிவுகொள்க. (22)

ஐம்படை

23 இறுகா வடிக்கொண் டெழும்பும் படாமுலை
யிடைப்பின்னை பாற்பின்னையே
யென்னாது முன்னுளி லிந்த்ரா புரித்தரு
வெடுத்துக் கொணர்ந்தமாயன்
அறுகால் புடைக்குஞ் சுரும்புசூழ் பாசடை
அலங்கற் றுழாய்மணக்கும்
அச்சுதப் பச்சைமா லைக்குறுங் காபுரி
அபங்கனைக் காத்தளிக்க

மறுவாய் துடைக்குஞ் சுடர்த்திகிரி யொன்றுபகை
மண்டமர் கடந்துழக்கும்
வலம்புரிக் குலமொன்று நாந்தகப் படையொன்று
வல்லசுரர் செவியடைப்பச்
சிறுநா ணொலிக்கொண்ட சிலையொன்று பிறிதொன்று
சிதையாத வயிரமூட்டுந்
திணிதலைப் பரியுடற் கோளரைத் திண்டிறற்
றெண்டா யுதக்கடவுளே. (அ)

குறிப்புரை:—இறுகா - நெருங்கி. அடிக்கொண்டு எழும்பும்-தோன்றிப் பூரிக்கின்ற. படாம் - ஆடை. இடைப் பின்னை பால் - இடையர்குடிப் பிறந்த நப்பின்னைப்பிராட்டிதிறத்து. பின்னையே என்னுது-பின்புதருவேன் என்று சொல்லாமல். அறுகால்புடைக்கும் துழாய், சுரும்புசூழ் பாசடைத் துழாய் என்க. அறுகால் - வண்டு. புடைத்தல் - ஒலித்தல். சுரும்பு-ஆண் வண்டு. பாசடை - பசிய இலையாகிய. துழாயலங்கல் - துழாய்மாலை. அச்சுதனுகிய பச்சைமாலென்க. அபங்கன் - அழிவற்றவன். மறுவாய் - பகைப் புலம். துடைத்தல் - எளிதே அழித்தல். சுடர் - ஒளி. திகிரி - சக்கரம். மண்டு அமர் - நெருங்கிய போரில். பகை - விரோதிகளை. கடந்து-வென்று. உழக்கும் - கலக்குகின்ற. குலம் வலம்புரி - சிறந்த பாஞ்சஜந்யம் என்னும் சங்கம். நாந்தகப்படை - நாந்தகமாகியபடை = திருமாலின் பஞ்சாயுதங்களுள் நாந்தகம் என்று வழங்கும் வாள். வல் அசுரர் செவியடைப்ப - வலிய அசுரர்களுடைய காது செவிடுபடும்படி. வல்ல சுரர் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலுமாம். சிறுநாணொலிக்கொண்ட சிலை - சிறிய நாணொலியெழுவித்த சார்ங்கமென்னும் வில். பிறிதொன்று சிதையாத - வேறென்றாலும் வலியழியாத. வயிரம்-வலிமையை. ஊட்டும் - தருகின்ற. திணிதலை - திண்ணிய தலையினையும் பரியுடல் - பெரிய உடலினையும். கோளரை - பெருமையுடைய இடைப்பாகத்தையும் (உடைய). திண்டிறற்றண்டு ஒன்றும் எனக் கூட்டுக. திகிரி ஒன்றும் வலம்புரி ஒன்றும் நாந்தகப்படைஒன்றும் சிலையொன்றும் தண்டு ஒன்றும் ஆகிய ஆயுதக்கடவுள் என்க. மாயனும் பச்சைமாலும் ஆன குறுங்காபுரி அபங்கனை ஆயுதக்கடவுள் காத்தளிக்க என முடிவு கொள்க.

(23)

சிவபிரான்

24 அரவு பகிரதி நண்டுளித் தூற்றுநீ
ரமுத கலைவளர் வெண்பிறைக் கீற்றுமேல்
அறுகு சொருகிய செஞ்சடைக் காட்டினர்
அரிய முதுபிர மன்சிரத் தோட்டினர்
ஒருகை தமருகத் துந்துமிக் கேற்கவே
உலைய முயலக னெஞ்சுறத் தாக்குதா
ளொருவ னிரணிய னம்பலக் கூத்தன்வேர்
... ...
மருத மொடிபட வஞ்சகப் பேய்ச்சியாம்
வலவை புணர்முலை செங்கையிற் சேர்த்திமேல்
வயிர முறுக வமுந்துபற் பூட்டிநா
வருட நெருடி நகங்குளிப் பாட்டிவீழ்
குருதி யருவி வழிந்தசிற் றூற்றுநீர்
குமிழி யெழவுயி ருண்டிளைப் பாற்றிவாய்க்
குதலை மதலை மொழிந்தசொற் சூட்சிமால்
குழக னழகிய நம்பியைக் காக்கவே. (க)

குறிப்புரை:—அரவு - பாம்பு. பகிரதி - கங்கை. பாம்பும் நுண்ணிய திவலைகளைத்தூவும் கங்கையும் நீர்மையுடைய அமுதகலையொடு வளர்கின்ற வெள்ளிய பிறைச்சந்திரனும் ஆகிய இவற்றின்மேல் அறுகம்புல் செருகிய சிவந்த சடைக்காட்டையுடையவர் என்க. அரவு முதலியன செவ்வெண். முதுபிரமன் சிரத்து ஓட்டினர் - முதியோனான பிரமனுடைய மண்டையோட்டைக் கையின்கட்கொண்டவர். அத்து சாரியை. ஒருகை தமருகத்துந்துமிக்கு எற்ப முயலகன் உலைப (அவன்) நெஞ்சுறத்தாக்கு தாள் ஒருவன்- ஒற்றைக்கையிற்கொண்ட உடுக்கையொலிக்கிசைய முயலகன் என்னும் பூதம் வருந்தும்படி அதனுடைய நெஞ்சிலே பதியும்படி மிதித்த கால்களையுடைய ஒப்பற்றவன். தமருகம் - உடுக்கை. தமருகத்துந்துமி - உடுக்கையாகிய வாச்சியம். இரணியன் - பொன்னிறமுடையவன், அம்பலக்கூத்தன் - சிற்றம்பலத்து நடமாடுவோன். செஞ்சடைக்காட்டினர், பிரமன்சிரத்தோட்டினர், முயலகனெஞ்சுறத்தாக்குதாள் ஒருவன், இரணியன், அம்பலக்கூத்தன் என்றது சிவபெருமானுடைய சொரூபலக்ஷணங்கூறியது. வலவை-நாணிலி. புணர்முலை செங்கைசேர்த்தி - இணைந்த தனங்களில் செவ்விய கைத்தலங்களைவைத்து. வயிரம் முறுக-சினம் மூள. பூட்டி-பதியவைத்து. நா வருட-

காவானது தடவிச் சுவைக்க. நெருடி - விரலால் நிமிண்டி. குருதி - ரத்தம். குமிழி எழ - கொப்புளம் தோன்ற. குதலைமொழிந்த வாய் மதலை எனக் கூட்டுக. குதலை - பொருள்விளங்காதசொல். மதலை - சிறுபிள்ளை. சொற்சூட்சி மால் - புகழப்படுகிற பேரறிஞனாகிய திருமால். குதலை மொழிந்தவாய் மதலையும் மாலும் குழகனும் ஆகிய அழகியநம்பியை அம்பலக்கூத்தன் காக்க என முடிக்க. (24)

25 பாதர் பாற்றிரு மவுலிசூட்டிய கருணை பூட்டியகார்
பரவை தீப்பட வழுது கூப்பிடு பகழி பூட்டியமால்
அருகு காப்பது முரிமை யாட்படு பழைய கோத்திரமே
யரவின் மேற்றுயில் பொழுது காப்பது கருடன் மாத்திரமே
இரவி காப்பது பகல்ந டாத்திய பொழுது சேட்படுகா
ரிருள்க டாக்கிய பொழுது காப்பது சசிகு லோத்தமநீள்
புரிசை காப்பது நெடிய நாற்றிசை யவனி காப்பவரே
பொருளும் வாழ்க்கையு முழுது காப்பது குலிசபத்திரரே (௩௦)

குறிப்புரை:— இச்செய்யுளால் அழகியநம்பியைக்காத்தற்குரியராக ஆசிரியர் தேவர் பலரைக் குறித்திருக்கிறார். பாதர்பால்-பரதாழ்வானிடத்து. திருமவுலி - சிறந்த (பாதுகையாகிய) கிரீடத்தை. கார் - மேகம்போல்பவன். பரவை - கடல். கார் மால் என்றது அழகியநம்பியை. காரும் மாலுமானவனருகு. அருகு - பக்கத்து. காப்பதும் - காவல்புரிவதும் உரிமைஆட்படு பழைய கோத்திரமே - தனக்கேயுரியதான அடிமைப்பணியிலேபுக்க பழைய குடியே. இங்கே கோத்திரம்-குடி. அது ஆகுபெயராய்க் குடிப்பிறந்தாரைச் சுட்டிநின்றது. அரவின்மேல் துயில்பொழுது-(அழகியநம்பி) சேஷசயனத்து யோகநித்திரைசெய்யும்பொழுது. இரவி காப்பது பகல்நடாத்தியபொழுது; சேட்படு - நெடுந்தூரத்தில்விலகிய. கார் - கரிய. இருள்கள்தாக்கியபொழுது காப்பது சசி - இருள்கள்மேல்வந்த இரவிற் காவல்புரிவது சந்திரன். சசி-சந்திரன். குல உத்தம நீள்புரிசைகாப்பது நெடியநாற்றிசை அவனிகாப்பவர்-சிறந்த மேலான நீண்டமதிலைக் காப்பது நீண்டநாற்றிசையுலகங்களையுங் காப்பவரே. பொருளும் வாழ்க்கையும் முழுதுகாப்பது குலிச பத்திரரே - செல்வத்தையும் அநுபவத்தையும் முற்றும் காவல்புரிவது இந்திரனும் வீரபத்திரனுமே. (25)

க. காப்புப்பருவம் முற்றும்

உ. செங்கீரைப்பருவம்

26 தாரணி யிரண்டடி யளவை தரும்படி சிந்தாய் வந்தாய்முன்
சதுமறை கண்டனை சமய பரம்பர சந்தா பந்தீரத்
திருவடி தந்தனை யகலிகை யென்பவள் வன்சா பஞ்சாயத்
திகிரி புரந்தனை யிரவி கரந்திருள் மந்தா ரங்கூரக்
கருணை வெளங்கரை புரள வழங்கிய வன்பே முன்பேயின்
கனதன முண்டவ ளுயிரையு முண்டவ கண்சா யும்போதும்
அரிகரி யென்பவ ரிதய நிரந்தர செங்கோ செங்கீரை
யழகிய நம்பியெ னமுத வளம்புயல் செங்கோ செங்கீரை.(க)

குறிப்புரை:—கவி, இச்செய்யுளால் அழகியநம்பியின் பெருமைகளைப் பல படியாகக் கூறி விளித்துச் செங்கீரையாடியருள் என்று வேண்டுகிறார். தாரணி - உலகம். சிந்து - குறள். சதுமறை - நான்கு வேதங்களையும். கண்டனை - உண்டாக்கினாய். சமயபரம்பர - சமயவாதிகளாற் பேசப் படும் கடவுளே. சந்தாபம் தீர் அத்திருவடி(யை) அகலிகையென்ப வள் வன்சாபம் சாயத் தந்தனை என இயைக்க. சந்தாபம் - மிக்கவெம்மை. தீர் - நீக்குகின்ற. அ பண்டறிசுட்டு. 'துயரறு சுடரடி' என்பது இங்கு நோக்கத்தகும். அகலிகையென்பவள் சந்தாபம் தீரவும் வன்சாபம் சாயவும் திருவடிதந்தனை யென வுரைக்கலுமாம். சாய - கெட. இரவிகரந்து இருள் மந்தாரம் கூரத் திகிரிபுரந்தனையென இயைக்க. இரவி - சூரியன் கரந்து - மறைந்து. இருள் மந்தாரம் - இருளொடுகூடிய மந்தாரம். மந்தாரம் - குளிர்ச்சி. கூர - மிக. திகிரிபுரந்தனை - சக்கரப்படையை ஏவினாய். ஏவியது பாரதயுத்தத்துப் பதினான்காநாட் போரில், கருணை வெள்ளம் கரைபுரள வழங்கிய அன்பே. பேய் - பூதனை. கண்சாயும் போதும் - உறங்கும்போதும். அரிகரியென்பவர் - ஹரி: ஹரி: என்று கூறுவோருடைய. இதயம் நிரந்தர - மனத்தில் எப்பொழுதும் உள்ளவனே. செங்கீரை என்பது சிறுவராடுங் கூத்தினுள் ஒன்று. இப்பருவப்பாடல்கள், செங்கோசெங்கீரை ஆடுகசெங்கீரை செங்கீரையாடியருளே என்பவற்றுள் ஒன்றுகொண்டு முற்றிநிற்கும். (26)

27 காதல முந்திரு முகமும் விளங்கிய கண்கா லுஞ்சாலக்
கமல மலர்ந்தெழு முவளக மென்றொரு சிங்கா ரங்கூர
வரிசை வலம்புரி சுதரி சனங்கிர ணங்கா லுந்தோறும்
மதியு மிருங்கதி ரவனு மொருங்கெழு குன்றாய் நின்றாய்மன்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2	கணுநால் (5) இனியநாற்பது (உரை) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்). ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல் ...	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும் உரையும் ...	1	0	0
23.	விக்கிரமசோழனுலா ...	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0

38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா ...	0	12	0

குறிப்பு:-கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 46 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4-0-0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.